RE/MAX Realtron Blue Force
Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 31 மார்ச் 2023 இதழ்:- 49

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## இலங்கை அமைச்சர்களின் தென்னாபிரிக்க விஜயம் குறித்து தென்னாபிரிக்க மனிதஉரிமை அமைப்புக்கள் அதிருப்தி

இலங்கையின் யுத்தக்குற்றத்துடன் தொடர்புடைய நபர்களை நல்லிணக்கம் மற்றும் நிலை மாற்றுக் கால நீதி அறிந்து கொள்வதற்காக தென்னாபிரிக்க அரசாங்கம் அழைத்துள்ளமை குறித்து அந்த நாட்டின் மனித உரிமை அமைப்புகள் கூட்டாக கேள்வி எழுப்பியுள்ளன. இலங்கையின் வெளிவிவ கார அமைச்சர் (3ம் பக்கம் பார்க்க)




# அடையாளங்களை அழிக்கும் சிங்கள இனவாத அரசியல்!



பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதாகக் கருதப்படும் நிலையில், நாட்டில் மீண்டும் இனவாதம் மற்றொரு வடிவத்தில் தீவிரமடைந்து வருகிறது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்ற கோட்பாட்டை வலுவிழக்கச் செய்வதை இலக்காகக் கொண்டு திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களுடைய அடையாளங்களை இல்லாமல் செய்வதை நோக்கமாகக்கொண்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.(9ம்பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை கலைமாமணி ராஜேஸ் வைத்தியாவின் இசைச்சங்கமம்

எமது இனிய வாசகர்கள், அபிமானிகள், கலா ரசிகர்கள் அனைவரது கவனத்திற்கு! இவ்வாண்டு மண்டபத்தின் இருக்கைகளின் நம்பர்கள் நுழைவுச் சீட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளது. எனவே அன்புள்ளங்கள் இறுதி நேரம் வரை காத்திருக்காமல் 416 841 9600 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஒத்துழைப்புக்கும் ஒத்தாசைக்கும் நன்றி! வணக்கம்! வாருங்கள்! அரங்கத்தில் சந்திப்போம்! மேலதிக விபரங்களுக்கு 12, 13ம் பக்கம் பார்க்க

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4


BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence/ Galloway

**Scarborough** **$499,900**
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals


### Finch & Pharmacy

**Scarborough** **$543,900**
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area


### Yonge/Finch

**Toronto** **$579,000**
Bedrooms: 1 Washrooms: 1
Luxurious Bright & Spacious unit


### Bowmanville /Northglen

**Clarington** **$699,000**
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Townhouse

### Eglinton/Markham

**Scarborough** **$699,999**
Bedrooms: 3 Washrooms: 2
Low Maintenance Free

### Queens Quay & Lower Sherbourne

**Toronto** **$874,900**
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

### Steeles/Mclaughlin

**Brampton** **$1,100,000**
Bedrooms: 3 Washrooms: 3
A Quiet Family Neighborhood


### River Street & Highway 12

**Brock** **$1,350,000**
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement

### Meadowvale / 401

**Scarborough** **$1,998,786**
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.

### Sandalwood & Richvale

**Brampton** **$675,000**
Bedrooms: 3 Washrooms: 2
Call for more info

### Eglinton/Sloane

**Toronto** **$539,000**
Bedrooms: 1 Washrooms: 1
Doubble Closet & Open Balcony.

### Danforth & Eglinton Ave

**Toronto** **$456,500**
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept With Modern Kitchen

### Keele/Sheppard


**Toronto** **$810,000**
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

### Mccowan & Ellesmere
FOR LEASE

**Scarborough** **$3,200**
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

### Liverpool & Commerce S
FOR LEASE

**Pickering** **$2,700**
Bedrooms: 3 Washrooms: 1
Close To Parks

### Birchmount/Ellesmere
FOR LEASE

**Scarborough** **$2,400**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கை அமைச்சர்களின் தென்னாபிரிக்க விஜயம் குறித்து தென்னாபிரிக்க மனிதஉரிமை அமைப்புக்கள் அதிருப்தி




இலங்கையின் யுத்தக்குற்றத்துடன் தொடர்புடைய நபர்களை நல்லிணக் கம் மற்றும் நிலை மாற்றுக்கால நீதி அறிந்து கொள்வதற்காக தென்னா பிரிக்க அரசாங்கம் அழைத்துள்ளமை குறித்து அந்த நாட்டின் மனித உரிமை அமைப்புகள் கூட்டாக கேள்வி எழுப்பியுள்ளன.

இலங்கையின் வெளிவிவகார அமைச் சர் அலி சப்ரியும் நீதியமைச்சர் விஜய தாச ராஜபக்சவும் தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழை ப்பிற்கான அமைச்சர் நலெடி பன்டுரின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டுள்ளனர் என அந்த அமைப்புகள் தெரிவித்து ள்ளன.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்கு விப்பதற்காக தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க அனுப வங்களை கற்றுக் கொள்வதே இந்த விஜயத்தின் நோக்கம் என அறிவிக்கப் பட்டுள்ளதாக மனித உரிமை அமை ப்புகள் தெரிவித்துள்ளன.

தெரிவிக்கப்பட்ட நோக்கங்கள் உயர் வானவை என்ற போதிலும் தொடரும் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் சிவில் சமூகம் ஒடுக்கப்படுவது மற்றும் 1983 முதல் 2009 வரையான உள் நாட்டு போரின் போது இழைக்கப்பட்ட மோசமான மனித உரிமை மீறல் களிற்கு குற்றவியல் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு இலங்கை அரசாங் கம் தவறியது இலங்கை அதிகாரி களிற்கான தென்னாபிரிக்காவின் அழை ப்பு கரிசனையளிக்கின்றது எனவும் தென்னாபிரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் கூட்டாக தெரிவித்துள் ளன. இந்த குற்றச்சாட்டுகளில் சில பாரதூரமான மனித குலத்திற்கு எதிரான மற்றும் யுத்த குற்றஙகள் போன்ற பாரிய மனித உரிமை மீறல் களாக இருக்கலாம் என ஐக்கிய நாடு கள் தெரிவித்துள்ளது எனவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள் ளன. இலங்கையில் குறுகிய பகுதிக் குள் குறுகிய காலத்தில் 40,000 முதல் 70,000 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என ஐநா மதிப்பிட் டுள்ளது.

தென்னாபிரிக்காவிற்கு அழைக்கப்பட்டு ள்ள இரண்டு அதிகாரிகளும் பார தூரமான சர்வதேச குற்றங்கள் குறித்த (22ம் பக்கம் பார்க்க)

# விக்கிரகங்கள் பிடுங்கி வீசப்பட்டதற்கு நீதி சமாதான ஆணைக்குழு கண்டனம்!


யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு
Commission For Justice & Peace of The Catholic Diocese of Jaffna
T. Phone No: 0778096144
E-mail : mangalarajah@gmail.com
P. O. Box : 02
Bishop's House,
Jaffna, Sri lanka.
..................20..........
Director/Chairman
Rev.Fr.S.V.B.Mangalarajah
Patron
Rt.Rev.Dr Justin B. Gnanapragasam
Bishop of Jaffna
Secretary
Mr. A. Santhiapillai

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய புனித சின்னங்கள் சிதைக்கப்பட்டமைக்கான கண்டனம்

வவுனியா ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தி லிருந்து சூலங்கள் மற்றும் சிவலிங்கம் என்பன பிடுங்கி வீசப்பட்டதற்கு யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமா தான ஆணைக்குழு வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு 29 மார்ச் 2023 புதன்கிழமை வெளியிட்ட ஊடக அறி க்கை மூலமாக கண்டனத்தை வெளி யிட்டது. அந்த அறிக்கையில் உள்ள தாவது,

வவுனியா மாவட்ட எல்லையிலுள்ள வெடுக்குநாறிமலையிலுள்ள ஆதிலிங் கேஸ்வரர் திருத்தல புனித சின்னங்களை சிதைத்தமையும், அப்புறப்படுத்தியமை யையும் யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்து சமயம் இலங்கையின் தொன்மை மிகு மதம் என்பதையும் இலங்கையின் வடக்குக்கிழக்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் பல பாடல் பெற்ற சைவ சமய வணக்கத்தலங்களும், பழமை வாய்ந்த வழிபாட்டிடங்களும் உள்ளன என்பதை மற்றெல்லா மதத்தவரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

ஒரு சமயத்தவரது பழமை வாய்ந்த மதத் தலத்தை அகற்றுவது அல்லது சிதைப்பது அல்லது அவசங்கைப் படுத்துவது மத நல்லிணக்கத்துக்கு ஒரு போதும் உதவப்போவதில்லை. அண்மைக்காலமாக சில இந்து மத வணக்கத்தலங்கள் இவ்வாறு பெரும் பான்மை சமயத்தவரால் அழிக்கப் படுவது வேதனையளிப்பதாயுள்ளது. இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெறும் போது சட்டத்தையும், ஒழுங்கையும், நீதியையும் நிலைநாட்ட வேண்டியவர் கள் ஒன்றும் நடைபெறாதது போல செயற்படாதிருப்பது நாட்டுக்கும், மக்களுக்கும் நீதிக்கும் சமாதானத் துக்கும் நல்லதல்ல.

இலங்கையில் பௌத்தர்கள் பெரும்பான் மையினர் என்ற கூற்றை அடிப்படை யாகக் கொண்டு நாட்டில் தாம் விரும்பிய இடத்தில் அவ்விடத்தில் தொன்மைமிக இந்து ஆலயங்கள் இருந்தாலும் அவற்றை அகற்றிவிட்டு பௌத்தர்கள் தமது விகாரைகளை அமைக்கலாம் என்ற கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறாக அண்மைக்காலமாக குருந் தூர் மலை விவகாரம், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை விவகாரம், கச்சதீவில் புதிதாகப் புத்தர் சிலை வைக்கப்பட்டமை ஆகிய செயற்பாடு களை ஏற்றுக் கொள்ள முடியாது. இதுபோன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட உடன் காத்திரமான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்கவேண்டும்.

மீண்டும் மிக விரைவில் சிதைக்கப் பட்டு, அகற்றப்பட்ட வெடுக்கு நாறி மலை ஆதிலிங்கேஸ்வர ஆலய சின்னங் கள் இந்து மத நெறிகளின்படி பிரதிர் ஷ்டை செய்யப்பட வேண்டுமென்றும் இந்து சமயத்தின் தொன்மைத்தன்மை பாதுகாக்கப்பட் வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றோம்.

இதையே இந்துக்களும், இந்துக்களின் தொன்மைமிகு வரலாற்று பின்னணி யையும் இலங்கையின் சமய நல்லிணக் கத்தையும், சமாதானத்தையும் விரும்பும் எல்லா மக்களும் எதிர்பார்த்து நிற்கின்ற னர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**




அல்பியன் புதியில் கோயில்கொண்டருளியிருக்கும்

# அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## ஏகதின இலட்சார்ச்சனையும் மகாஹோமமும்

நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் பங்குனி திங்கள் 24ம் நாள்(07-04-2023) வெள்ளிக்கிழமை நடைபெற அம்பாள் திருவருள் கூடியுள்ளது. அன்று காலை 7மணிக்கு விக்னேஸ்வர பூஜையுடன் இலட்சார்ச்சனையும் மகாஹோமமும் ஆரம்பமாகும் தொடர்ந்து, 12மணிக்கு மதிய பூசையுடன் அன்னதானமும் வழங்கப்படும். மீண்டும் மாலை 4மணிக்கு தொடங்கி 7மணி பூஜையுடன் பூர்த்தியாகும்.

இப்பூஜையானது நினைத்த காரிய நிறைவு பெறும், உடல் மனம் சார்ந்த பிரச்சினைகள் ஆகலும், மாங்கல்ய பலன் கிடைக்கும், கடன் சுமை அகலும், புத்திர பாக்கியம் கிடைக்கும்

## அர்ச்சனை ஹோமத்தில் கலந்து சிறப்பிக்கும் குருமார்

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆறுமுக குருக்கள்
மோகன் ஐயா
சர்வ போதக ஆசிரியர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள்
சாதக ஆசிரியர் சிவஸ்ரீ வெங்கட் ரமணக் குருக்கள்
சிவஸ்ரீ நர்த்தன ராஜக் குருக்கள்
சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள்
சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள்
சிவஸ்ரீ செல்வ கிருபாகரக் குருக்கள்
சிவஸ்ரீ சுரீந்திரக் குருக்கள்

சிவஸ்ரீ தினேஸ்சிவக் குருக்கள்
சிவஸ்ரீ கந்தசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்கள்
சிவஸ்ரீ சந்துருக் குருக்கள்
சிவஸ்ரீ முருகன் குருக்கள்
சிவஸ்ரீ செல்வராஜக் குருக்கள்
சிவஸ்ரீ வரதராஜக் குருக்கள்
சிவஸ்ரீ சிவானந்தராஜக் குருக்கள்
சிவஸ்ரீ மோகன் வைரவசுந்தரம் குருக்கள்

யோகநாதன் ஐயா
சாந்தரூபன் ஐயா
சிவகுமார் ஐயா
வரதன் ஐயா
கோனேஸ் ஐயா
குபன் ஐயா
பிரணவன் ஐயா
சிவம் ஐயா

இலட்சார்ச்சனை, மகாஹோமத்தில் பங்கு பெற்ற விரும்பும் அடியார்கள் ஆலயக்காரியலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

1771 ALbion Road. Unit #1, Toronto, Ontario, M9W 5S7, Canada. 416.213.0110

இவ்வண்ணம்: ஆலய தர்மகர்த்தா சபையினர்

# IMFவால் இனப்பிரச்சனையில் தலையிட முடியுமா?

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உறுதியளிப்பட்ட நிதியில் ஒரு பகுதியை விடுவித்திருக்கின்றது. இதனைத் தொடர்ந்து பொருளாதார இறுக்கத்தில் சில தளர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. நாணய நிதியத்தின் நிபந்தனைகள் முறையாக நிவர்த்தி செய்யப்படும் போது பொருளாதார நிலைமைகள் வேகமாக மாற்றமடையலாம்.

இறக்குமதி கட்டுப்பாடுகளும் நீக்கப்படலாம். அவைகள் படிப்படியாக நீக்கப்பட்டேயாக வேண்டும். ஏனெனில், நாணய நிதியத்தை பொறுத்தவரையில், இலங்கையின் வருமான மூலங்களை அதிகரிக்க வேண்டும். இறக்குமதி கட்டுப்பாடுகளை பேணிக் கொண்டு வருமான மூலங்களை அதிகரிக்க முடியாது.

தமிழ் சூழலில் ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. எல்லாவற்றையும் உணர்ச்சிவசப்பட்டு நோக்குவது போன்றே சர்வதேச நாணய நிதிய விடயங்களிலும் தமிழ் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகள் என்போரும் உணர்ச்சி வசப்படுகின்றனர். கனடாவின் பாராளுமன்ற உறுப்பினரான ஹரிசங்கரி அரசியல் தீர்வு தொடர்பில் நாணய நிதியம் சில நிபந்தனைகளை விதித்திருக்கலாம் – ஆனால் விதிக்கவில்லையென்று குறிப்பிட்டிருக்கின்றார்.

முதலில் நாணய நிதியத்தின் எல்லையை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான இலக்கு நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும். ஒரு நாடு பொருளாதார ரீதியில் திவாலாகும் போது, அது ஏனைய நாடுகளையும் பாதிக்கும் – இதனை தடுப்பதற்கு குறித்த நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து தூக்கிவிட வேண்டும்.

இந்த அடிப்படையில் தான் நாணய நிதியம் ஒரு நாட்டின் பொருளாதார விடயங்களில் தலையீடு செய்யும். குறித்த நாடு நாணய நிதியத்தின் உதவியை கோரும்போது, நாணய நிதியம் சில நிபந்தனைகளோடு குறித்த உதவியை வழங்குவதற்கு இணங்கும். அதே வேளை, குறித்த நாடு நாணய நிதியத்தின் நிபந்தனைகளை சரியாக நிவர்த்தி செய்கின்றதா என்பதையும் தொடர்ந்து கண்காணிக்கும்.

கடனுதவியை வழங்கும் போது, குறித்த நாட்டின் உள்ளக அரசியல் விடயங்களில் தலையீடு செய்யாது. ஆனால், நல்லாட்சி மற்றும் சட்டம் ஒழுங்கு விடயத்தில் கவனம் செலுத்தும். ஒரு நாட்டில் நல்லாட்சி கட்டமைப்பு முறையாக கடைப்பிடிக்கப்பட்டால் தான், அந்த நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமாக நிலைபெறும். இந்தப் பின்புலத்தில் நாணய நிதியத்தின் கடனுதவிகளை பெறும் நாடுகளில் சட்டம் ஒழுங்கு மற்றும் நல்லாட்சி கட்டமைப்பை பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாாணய நிதியம் வலியுறுத்தும்.

நல்லாட்சி விடயத்தில் நாணய நிதியத்தின் பங்களிப்பு எவ்வாறு அமையுமென்பது தொடர்பில் அந்த அமைப்புக்கு என்று கொள்கை நிலைப்பாடு உண்டு. நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையால் 1997இல் இணக்கம் காணப்பட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. இது பின்னர் 2018இல் மீளவும் திருத்தியமைக்கப்பட்டது. ஒரு நாடடின் நல்லாட்சியில் நாணய நிதியத்தின் பங்களிப்பு எவ்வாறு அமையுமென்று குறித்த கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இதற்கப்பால் உள்நாட்டில் அரசியலை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும், சிறுபான்மை மக்களின் பிரச்னையை எவ்வாறு தீர்க்க வேண்டுமென்று நாணய நிதியம் பரிந்துரைகளை முன்வைக்காது அவ்வாறு முன் வைக்கவும் முடியாது. இதனைப் புரிந்து கொண்டே நாணய நிதியம் தொடர்பில் பேச முற்பட வேண்டும். சாமானியர்கள் உணர்ச்சிவசப்படுவதில் தவறில்லை. ஆனால் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும், அரசியல் பிரதிநிதிகள் என்போர், விடயங்களை பேசுவதற்கு முன்னர், நாணய நிதியத்தின் கொள்கை நிலைப்பாடுகளை குறைந்தளவிலாவது படிக்க வேண்டியது அவசியமானது.

# தென்னாபிரிக்காவுடன் சேர்ந்து அரசியல் தீர்வை எட்ட செயற்குழு?



இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கையில் முன்மொழியப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் வழிமுறைகளை வகுக்க தென்னாபிரிக்காவுடன் இணைந்து இலங்கை செயற்குழு ஒன்று அமைக்கப்படும் என வெளியுறவு அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் இணைந்து மார்ச் 21 மற்றும் 25 ஆம் திகதி வரை அவர் தென்னாபிரிக்கப் பயணம் ஒன்றை மேற்கொண்டதன் அடிப்படையில் இலங்கைக்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்க தென்னாபிரிக்க அதிகாரிகள் முன் வந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

1948 முதல் 1994 வரை தென்னாபிரிக்கா வில் நிலவிய, நிறவெறி முடிவுக்குப் பிறகு அந்த நாட்டில், இன சமூகங்களுக் கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை உருவாக்குவதும் இந்த திசையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளில் அடங்கும் என இலங்கை முன்னதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு தெரிவித்திருந்தது. அந்த வகையில் தென்னாபிரிக்கத் தலைவர்கள் இத்தகைய பொறிமுறையின் ஊடாக நல்லிணக்கத்திற்கான ஏற்படுத்தும் அணுகுமுறைகளை பகிர்ந்து கொண்டதாக அமைச்சர் சப்ரி கூறினார். இதன் அடிப்படையில் தென்னாபிரிக்க அனுபவத்தின் அடிப்படையில் இலங்கையில் பொறிமுறையை அமைப்பதற்கு ஒரு செயற்குழு நியமிக்கப்படும். இதற்காக இலங்கையின் அரசியல மைப்பு விதிகளுக்கு அமைய புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துக்கொள்ளப்படும் என்றும் சப்ரி தெரிவித்தார்.

# சர்வதேசம் ரணில் பக்கமா?

மக்களும் சர்வதேசமும் எனது பக்கம் எனவே தொழிற்சங்க போராட்டங்களால் அரசாங்கத்தை வீழ்த்த முடியாதென்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். தொழில் சங்கங்களும் எதிர் கட்சிகளும் போராட்டங்களை தீவிரப்படுத்தப் போவதாக எச்சரித்து வருகின்ற சூழலில் தான் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

நாடு பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் திவாலாகிய போது தான் ஓர் ஆசனத்துடன் இருந்த ரணில் விக்கிரமசிங்க எவருமே எதிர்பாராத வகையில் ஜனாதிபதியானார். கிட்டத்தட்ட அரசியலில் காணாமல் போய் விட்டாரென்று எண்ணிக் கொண்டிருந்த சூழலில் நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்கக்கூடிய அவதாரமாக ரணில் காட்சியளித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாதென்று கருதப்பட்ட சூழலில், அடுத்தது யாரென்னும் கேள்விக்கு அப்போது சில பதில்கள் முன்வைக்கப்பட்டன. அதில் முதன்மையான பெயர் சஜித் பிரேமதாஸ. ஆளும் தரப்பால் முடியாமல் போகும்போது எதிர்க் கட்சிதான் நாட்டை பொறுப்பெடுக்க வேண்டும். ஆனால், சஜித்பிரேதாஸவிடமிருந்து அந்த ஆளுமை வெளிப்படவில்லை.

ஒருவேளை சஜித் உடனடியாக நாட்டைப் பொறுப்பெடுக்க முன் வந்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகள் தோல்வியடைந்திருக்கலாம். மற்றவர்கள் தயங்கிக் கொண்டிருந்த போது ரணில் அந்த சந்தர்ப்பத்தை மிகவும் புத்தி சாதுர்யமாகவும் தந்திரமாகவும் பயன்படுத்திக் கொண்டார்.

அரசியல் நெருக்கடிகளை கையாள்வதில்தான் ஒருவரின் தலைமைத்துவம் வெளிப்படும். ரணில் நீண்ட அரசியல் அனுபவத்தையும் புத்திக்கூர்மையையும் கொண்டிருந்த போதும் ஜனவசியமுள்ள தலைவராக ஒருபோதுமே இருந்ததில்லை. ஜனவசியமின்மைதான் ரணிலால் ஜனாதிபதியாக முடியாமல் போனமைக்கான பிரதான காரணமாகும். ஆனால், தற்போது நாட்டின் நெருக்கடி நிலைமை ரணிலை ஓரளவு ஜனவசியமுள்ளவராக உயர்த்தியிருக்கின்றது.

முழுமையாக இல்லாவிட்டாலும் கூட இன்றைய சூழலில் ரணிலால் தான் சில விடயங்களை சாதிக்க முடியும், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்னும் பார்வையொன்று சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கின்றது.

அதேவேளை சர்வதேச சமூகத்துக்கும் பரீட்சயமான, குறிப்பாக அமெரிக்க மற்றும் மேற்குலகத்தின் ஆதரவை பெற்றவாராக இருப்பதும் தனக்கு சாதகமான ஒன்றாக இருப்பதாகவே ரணில் கருதுகின்றார். ரணில் கூறுவதில் தவறில்லை.

இன்றைய சூழலில் ஒப்பீட்டடிப்படையில் மேற்குலகத்துக்கு முன்னால் ஒரு தெரிவு இருக்குமென்றால், அது நிச்சயம் ரணில் விக்கிரமசிங்க மட்டும் தான். ரணிலை தவிர்த்து பிறிதொருவரை நோக்குமளவுக்கு வேறு எவருமில்லை. இந்தப் பின்புலத்தில் தான் ரணில் சர்வதேசம் தனது பக்கமாக இருப்பதாகக் கூறுகின்றார்.

இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி கொள்கையளவில் மேற்கு சார்பான கட்சியாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடுநிலைமை கொள்கையை கடைப்பிடித்த கட்சியாகவும் இருந்திருப்பதே வரலாறு. ஆனால் 2020 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்று தோல்வியை சந்தித்த போது இலங்கைத் தீவின் தாராளவாத அரசியலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

2005 ஜனாதிபதி தேர்தலில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்பதில் அமெரிக்கா கரிசனை காண்பித்திருந்தது. குறிப்பாக அப்போதிருந்த அமெரிக்க உதவி இராஜாங்க செயலர் ரிச்சர்ட் ஆமிட்ரேஜ் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பித்திருந்தார்.

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேர்தல் பகிஷ்கரிப்பு நகர்வால் ஆமிட்ரேஜின் நகர்வுகள் தோற்கடிக்கப்பட்டன. இதன் விளைவுகளை பின்னர் புலிகள் அனுபவித்தனர்.

2006இல் ஐரோப்பிய ஒன்றியம், கனடா ஆகியவை விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்தன. யுத்தம் முடிவுற்று 13 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில்கூட விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை இப்போதும் தொடர்கின்றது.

யுத்தம் முடிவுற்று 6 வருடங்களின் பின்னர் தான் 2015இல், ரணில் விக்கிரமசிங்க, அதிகாரமுள்ள பிரதமராக வரமுடிந்தது. தற்போது, மக்கள் ஆதரவுடன் ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் ரணிலை விடுத்து மேற்கு உலகால் வேறு எவரை ஆதரிக்க முடியும்.

# வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கத்தை அகற்றிய விசமிகள்!

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் கழற்றி வீசப்பட்டுள்ளதுடன் ஏனைய விக்கிரகங்களும் மாயமாகியுள்ளன. வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட் திணைக்களமும் நெடுங்கேணி பொலிசாரும் பல்வேறு தடைகளை ஏற்ப்படுத்தி வந்தனர்.

இதன் பின்னர் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த 2021 ஆம் ஆண்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த நிலையில் தொல்பொருட்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆலயத்தின் நிர்வாகத்தினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

எனினும் கடந்த வருடம் குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாகத்தினர்கள் வழக்கிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டதுடன், குறித்த சம்பத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதராங்களுடன் கண்டறிந்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் 26 மார்ச் 2023 காலை ஆலயத்திற்கு சென்ற கிராமமக்கள் மற்றும் பூசகர் ஆலய விக்கிரகங்கள் திருடப்பட்டு அழித்தெறியப்பட்டமையை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். குறிப்பாக ஆலயத்தின் பிரதான விக்கிரகமான ஆதிலிங்கம் அகழ்ந்து எடுக்கப்பட்டு அருகில் இருந்த புதருக்குள் வீசப்பட்டிருந்தது. அத்துடன் பிள்ளையார், அம்மன், வைரவர் விக்கிரங்களும் பெயர்த்தெடுக்கப்பட்டு கொண்டு



செல்லப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தமிழ் மக்களிடையே அதிர்ச்சியையும் கவலைகளையும், ஏற்படுத்தியுள்ளது.

### பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்ட ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டித்து யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று நடைபெற்றது. திங்கட்கிழமை மதியம் ஒரு மணியளவில் குறித்த போராட்டம் நடைபெற்றது.

குறித்த போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா? வெடுக்குநாரி மலை கச்சதீவு நெடுந்தீவு எங்கள் சொத்து, காவிகளின் அட்டகாசத்துக்கு முடிவில்லையா? இராணுவமே வெளியேறு கடற்படையே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், தொல்பொருட் திணைக்களமே வெளியேறு போன்ற கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டது.

### தொல்பொருள் திணைக்களம் மீது சந்தேகம்

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்டமைக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினரால் வவுனியா பிராந்திய மனிதஉரிமை ஆணைக்குழுவில் 27 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆலயத்தின் நிர்வாகத்தினர், எமது ஆலயத்தின் விக்கிரகங்கள் அழிக்கப்பட்டமை மூலம் பௌத்த ஆக்கிரமிப்பின் வெளிப்பாட்டை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும். இந்த துன்பியல் சம்பவம் எமக்கு மிகுந்த வேதனை அளிப்பதுடன் இவ்வாறான செயலை செய்தவர்களுக்கு எமது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலயத்திற்குள் செல்வதற்கு தொல்லியல் திணைக்களத்தால் எமக்கு தடை விதிக்கப் பட்டிருந்த நிலையில் அந்த திணைக்களத்தின் வாகனங்களே அங்கு தொடர்ச்சியாக சென்று வந்தது. எனவே இந்தச் சம்பவத்தின் பின்னணி தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் மீதே நாம் சந்தேகம் கொள்கின்றோம். மனித உரிமை ஆணைக்குழுவிலும் அவர்களுக்கு எதிராகவே எமது முறைப்பாட்டை பதிவு செய்திருக்கின்றோம் என்றனர்.

இதேவேளை விக்கிரகங்கள் அழிக்கப்பட்ட விடயம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பின்னணியில் அரசாங்கம்!


வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் சேதமாக்கப்பட்ட சம்பவத்திற்கு அரசாங்கத்தின் பின்னணி இருப்பது தெளிவானது என்று யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 27 மார்ச் 2023 இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இந்த செயற்பாட்டின் மூலம், முற்று முழுதாக மத பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி அதனூடாக சிலர் அரசியல் லாபத்தை அடைய எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சகலரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் வலியுத்தியுள்ளார்.

### ஆறு திருமுருகன் கண்டனம்!

வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்திலுள்ள விக்கிரகங்களை உடைத்துள்ளமை கண்டணத்துக்குரியது என அகில (22ம் பக்கம் பார்க்க)

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

04 ஏப்ரல் 2023 செவ்வாய்க் கிழமை– பங்குனி உத்தரம்

உபயம்:– ச.நிருஷன், ச.தனுஷன், ச.ஈஸ்வர்

விசேட அபிஷேகமும் பூஜையும் காலை 10.00 மணிக்கு நடைபெறும். பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

07ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் ஏகதின லட்சார்ச்சனையும் மூலமந்திர ஹோமமும் நடைபெறும்.

ஹோமத்தில் பங்கு பெற விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பெயர்களை பதிவு செய்யுங்கள்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழ்த் தேசியத்தை வளர்த்த தந்தை செல்வா

ஈழத்தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவர் 35 லட்சம் தமிழ்பேசும் மக்களின் கலங்கரை விளக்கம். வண்டதமிழின் வாழ்வு காத்த ஒளித் தீபம். எங்கள் அடிமை இரவை விடிவாக்க விடுதலைப் பரணி பாடிய பெருமகன். திராவிடத்தின் திருவிளக்கு சத்தியத்தின் ஒளி விளக்கு அகிம்சையின் தந்தை என்று போற்றப்பட்ட தந்தை செல்வா அவர்கள் ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கு முன் இலங்கைத்தீவிலே மிக உயர்ந்த - மிகக் கௌரவமான பதவியாகிய பிரதம நீதியரசர் பதவியை வகித்துக் கொண்டு மாடமாளிகையிலே மின்விசிறியின் கீழ் சொகுசாக வாழ வேண்டியவர் அந்த வாய்ப்பையும் வசதியையும் உதறித் தள்ளியெறிந்து விட்டு அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்.

1948ம் ஆண்டு இலங்கை இந்தியப் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டு பத்து இலட்சம் தோட்டத் தொழிலாளரது வாக்குரிமை குடியுரிமை பறிக்கப்பட்ட போது தான் சார்ந்திருந்த தமிழ்க்காங்கிரஸ் கட்சி அதனை ஆதரித்த போது இன்று பத்து இலட்சம் இந்தியத் தமிழனுக்கு நடக்கும் கழுத்தறுப்பு நாளை இலங்கை 35 லட்சம் தமிழனுக்கும் நடக்கும். இன்று குடியுரிமையில் கை வைத்தவர்கள் நாளை எங்கள் மொழி உரிமையிலும் கை வைப்பார்கள் என்று கூறி அச் சட்டத்தினை எதிர்த்து வாக்களித்து தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறினார்.

தமிழ்க்காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய தந்தை செல்வா அவர்கள் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் இரும்பு மனிதர் நாகநாதன் அன்றைய நாளில் பிரபல சட்டத்தரணியாக விளங்கிய வி. நவரத்தினம் (காவலூர்) சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த அண்ணன் அமிர்தலிங்கம், வி.என். நவரத்தினம் போன்றவர்களை இணைத்துக் கொண்டு தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார்.

மலையகத் தமிழர்களின் பிரச்சனையை முன் வைத்து ஆரும்பிக்கப்பட்ட ஓர் கட்சி இலங்கை வாழ் தமிழினத்தின் உரிமைக்காகக் குரல் கொடுக்கக் கூடிய உருப் பெற்றது என்றால் அது இலங்கைத் தமிழரசுக்கட்சி தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த தந்தை செல்வா அதனை வளர்த்தெடுக்கப் படாதபாடு பட்டார். இராணி வழக்குரைஞராக இருந்து சம்பாதித்த சொத்துக்களை எல்லாம் வாரி வாரி இறைத்தார். 1946ம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையை 192.000 ரூபா முதலீட்டுடன் ஆரம்பித்த போது 50 வீதமான பங்குகளை தந்தை செல்வா அவர்களே கொண்டிருந்தார். அக்காலத்தில் அது ஒரு மிகப் பெருந் தொகையாகும்.

ஆட்பலமும் அதிகார பலமும் பணப்பலமும் நிறைந்த தமிழ்க்காங்கிரசும் அதன் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலமும் வடக்கு மாகாணத்தில் செல்வநாயகம் தமிழர்களை சிங்களவருக்கு விற்று விட்டார் என்ற வெற்றுக் கோஷமும் கிழக்கு மாகாணத்தில் நடேசன் நல்லையா எதிர்மன்னசிங்கம் போன்றவர்கள் கிளப்பி விட்ட யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான் என்ற மாகாண பூசல்களையும் முறியடித்துதந்தை செல்வா கட்சியை வளர்க்கப் பட்டபாடுகள் எழுத்தில் வடிக்க முடியாதவை.

தந்தை செல்வா தலைமையில் அன்றை நாட்களில் புரட்சிகர சக்தியாக தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக மின்னத் தொடங்கியது. வெறுமனே அரசியல் கோஷங்களையும் அதிரடி அறிக்கைகளையும் வெளியிட்டு பரபரப்பான அரசியல் நடத்தி பாராளுமன்ற ஆசனங்களைப் பிடிப்பதையே நோக்கமாகக் கொள்ளாது தமிழினத்தின் சாபக்கேடாக தமிழினத்தின் மத்தியில் தீராத தொழு நோயாக இருந்த சாதி என்கின்ற கொடிய நோய்க்கு சாவுமணி அடிக்கப் புறப்பட்டார். அதில் வெற்றியும் கண்டார். 1956ம் ஆண்டளவில் நல்லூர் கந்தசாமி கோவில் கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம் தலைமையில் சிறுபான்மைத் தமிழர்களுக்கானத் திறந்து விடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைத் தமிழர்களுக்காக முதன்முதல் திறந்து விடப்பட்ட ஆலயம் நல்லூர் கந்தசாமி ஆலயமே என்பது குறிப்பிடத்தக்கது. அதே ஆண்டு நெடுந்தீவிலே தனிநாயகம் அடிகளாரோடு இணைந்து தந்தை செல்வா தலைமையில் சமபந்திப் போசன நிகழ்வையும் தமிழரசுக்கட்சியினர் தொடக்கி வைத்தனர்.

தந்தை செவ்வாவின் தலைமையை ஏற்று தமிழரசுக்கட்சியின் கீழ் தமிழினம் மெல்லமெல்ல அணி திரள்வதைப் பொறுக்க முடியாத எதிரணியினர் பல்வேறு தடைகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தினர். ஆனால் தடைகளையும் இடையூறுகளையும் உடைத்தெறியும் திண்ணிய நெஞ்சும் திடம் கொண்ட தோளும் கொண்ட தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் தெளிந்த நல் நோக்குடன் கல்லெறிக்கும் சொல்லெறிக்கும் மத்தியில் தந்தை செல்வா தலைமையில் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

1956ம்ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது அதனை திர்த்து தந்தை செல்வா தலைமையில் 300க்கு மேற்பட்ட தொண்டர்கள் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர். அன்றைய பிரதமர் பண்டாரநாயக்கா பாராளுமன்ற பல்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருக்க சிங்களக் காடையர் கூட்டம் சத்தியக்கிரகிகளைத் தாக்கியது. ஆனால் சத்தியாக்கிரகிகள் தங்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பில் பதட்டம் நிலவிய ஒரு கட்டத்தில் ஒரு பத்திரிகையாளர் தந்தை செல்வா அவர்களைக் கேட்டார் நீங்கள் போராட்டம் நடத்துவதால் சிங்கள மக்கள் ஆத்திரமடைந்து தமிழர்களைத் தாக்குவார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்று. அதற்கு தந்தை செல்வா கூறிய பதில் இன்றும் அப்படி ஒரு கேள்வியைக் கேட்பவர்களுக்கும் மிகப் பொருத்தமாகவே உள்ளது.

தந்தை செல்வா சொன்னார் தமிழர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுவது சிங்கள மக்களுக்குப் பிடிக்கவில்லை அவர்கள் ஆத்திரப்படுவார்கள் என்றால் நாளை தமிழர்கள் மூச்சு விடுவது கூட பிடிக்காமல் போகலாம். அதற்காக மூச்சு விடாமல் இருக்க முடியுமா? என்று பதில் அளித்தார்.

தந்தை செல்வா அவர்கள் ஈழத்தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி வந்தவர். இணைப்பாட்சியின் கீழ் தமிழினம் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்வதானால் வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர்களது பாரம்பரிய தாயகம் என்பதும் அந்தப் பிரதேசங்களில் தமிழ் மொழி நீதி நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்பதோடு அப்பிரதேசங்களில் குடியேற்றம் சம்பந்தப்பட்ட விடயங்கள் தமிழர் நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும் என்பதை தனது இறுதிக்காலம் வரை வலியுத்தியவர்.

1957ம் ஆண்டு பண்டா -செல்வா ஒப்பந்தம் 1965ம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தம் வரை மாத்திரமல்ல 1972ம் ஆண்டு முக்கூட்டு முன்னணி அரசாங்கம் புதிய குடியரசு அரசியலமைப்பு தயாரித்த போது கூட இதனையே வலியுறுத்தி வந்தார். என்றுமே அற்ப சொற்ப தீர்வுக்காகத் தமிழினத்தை மீளா அடிமைத்தனத்திற்குள் ஆழ்த்த தந்தை செல்வா அவர்கள் தயாராக இருக்கவில்லை. இலங்கைத்தீவில் மரி மாறி ஆட்சிபீடம் ஏறிய சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தமிழர்களுடைய அடிப்படை உரிமைகளையும் வழங்காதது மாத்திரமல்ல தமிழினத்தையே வேரோடு கருவறுக்கும் தனது இனவெறி நடவடிக்கையைத் தொடர்ந்தது. இந்நிலையில் தமிழினம் இணைப்பாட்சியின் கீழ் சிங்களவர்களோடு சரிசம உரிமை பெற்ற இனமாக ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று போராடிய தந்தை செல்வா அவர்கள் இறுதியாக ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தார்.

தமிழினம் விடுதலைப் போராட்டத்தை நடத்த வேண்டுமானால் முதலில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு பிரிந்து நிற்கும் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையுடன் அணிசேர் புரவியும் ஆட் பெரும் படையுடன் அரசியல் குருஷேத்திரத்தில் கடந்த முப்பது ஆண்டுகளாக அரசியலில் எதிரும் புதிருமாக நின்ற அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் வீட்டு வாசல்படியைத் தேடிச் சென்றார் தமிழினத் தலைவர் தந்தை செல்வா.

பகைமையை மறந்து தலைவர்கள் ஒன்றுபட்டனர். தமிழினம் வரலாற்றைப் புதுப்பிக்கத் தொடங்கியது. தமிழன் வரலாற்றில் விறுவிறப்பான புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டது.



இலங்கைத்தீவின் வரலாற்றில் தமிழ் இராச்சியங்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருந்ததாக வரலாறு கூறவில்லை. யாழ்ப்பாணத்தை ஒரு மன்னன் ஆண்டான். திருகோணமலையை மட்டக்களப்பை இன்னொரு அரசன் ஆண்டான். வன்னியை மற்றுமொரு குறுநில மன்னன் ஆண்டான் என்று தான் வரலாறு கூறுகின்றது. ஆனால் அந்த மாநிலங்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஓரணியாக்கி ஒரே கொடியின் கீழ் ஒரே தலைமையின் கீழ் ஒரே இலட்சியத்துக்காகப் போராட வைத்த ஒரு ஒப்பற்ற தலைவர். தந்தை செல்வா அவர்கள்.

1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து சோல்பரி அரசியலமைப்பின் கீழ் தமிழினத்திற்கு இருந்த அற்பசொற்ப உரிமைகளையும் பறித்து இலங்கைத் தீவை முற்றுமுழுதாக ஒரு பௌத்த சிங்களக் குடியரசாகப் பிரகடனப்படுத்திய சிங்களப் பேரினவாத அரசின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது பதவியை ராஜினாமாச் செய்தார் தந்தை செல்வா.

1975ம் ஆண்டு காங்கேசன்துறை இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தந்தை செல்வா அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாக மாத்திரமல்ல சிங்களப் பேரினவாதம் தமிழினத்தின் தேசிய உணர்வையும் தேசிய ஆத்மாவையும் ஆழக் குழி தோன் நீளப் புதைக்காது கடந்த 30 ஆண்டுகளாகப் பேணிப் பாதுகாத்துப் போராடி வந்த தந்தை அவர்கள் தமிழினத்திற்கு இறுதியாக விட்டுச் சென்ற உயிலாகவும் அமைந்தது.

இலங்கையில் பதவியில் இருந்த அரசாங்கங்களுடன் தமிழ்மக்கள்ன் சார்பில் நான் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் அனைத்தும் உதாசீனம் செய்யப்பட்ட நிலையில் தமிழினம் ஒரு தீர்க்கமான இறுதியான மாற்ற முடியாத ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. தமிழினம் தங்களுக்கு என்று ஒரு நாட்டை அமைத்துக் கொண்டு தங்களைத் தாங்களே ஆளப் புறப்பட்டு விட்டது. தமிழினம் இந்த நாட்டில் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் தமிழீழம் என்ற நாட்டை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை. தமிழீழம் என்ற ஒரு நாட்டை சிங்கள தேசத்திடம் இருந்து பலவந்தமாக நாம் பிரித்து எடுக்கவில்லை. ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் எம் மூதாதையர்கள் சீரோடும் சிறப்போடும் ஆண்ட மண்ணை மீளப் பெறுகின்ற ஒரு போராட்டத்தைத் தொடங்கி விட்டார்கள். தமிழீழம் பெறுவது என்பது ஒரு வில்லங்கனமான காரியம் தான். ஆனால் தமிழினம் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் இதை விட வேறு வழியில்லை. என்னுடைய காலத்தில் தமிழீழம் கிடைக்கா விட்டாலும் என்னுடைய இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்த எதற்கும் தயாரான எங்கள் எதிர்காலச் சந்ததி - இளைய தலைமுறை போராடியே தீரும். தங்களுக்கு என்ற ஒரு நாட்டை உருவாக்கியே தீருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்று எடுத்துரைத்தார்.

ஆம்! தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம் என்றும் பொய்த்ததில்லை. எந்த மக்களுக்காக எந்த மக்களை நம்பி தந்தை செல்வா 30 ஆண்டுகள் போராடினாரோ - எந்த இளைய சமுதாயம் தமிழீழத்தை உருவாக்கியே தீருவார்கள் என்று நம்பினாரோ அந்த மக்களும் அந்த இளைய சமுதாயமும் 30 ஆண்டுகள் மறவழிப் போராட்டத்தை நடத்தினார்கள்.

விடுதலைத் தீ ஓங்கி எரிந்த ஓம குண்டத்திலே வாழ வேண்டிய வயதில் தமிழினம் வாழத் தங்களை ஆகுதியாக்கிக் கொண்டார்கள். புதிய புறநானாறு படைத்தார்கள்.

அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும் தீர்வுகளுக்காகவும் தமிழினத்தை விலைபேசாமல் தமிழர் உரிமைப் போராட்டத்தை நடத்திய வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரின் உரிமைப் போராட்டம் பின்னாளில் வேலுப்பிள்ளை பிரபாகரனால் மாபெரும் விடுதலைப் போராட்டமாக நடைபெற்றது. சர்வதேச நாடுகளினது கவனம் தமிழீழத் தேசத்தை உற்று நோக்கத் தொடங்கியது. ஆசியக் கண்டத்தில் சின்னஞ் சிறிய நிலப் பரப்புக் கொண்ட தமிழீழ தேசம் வல்லமை பொருந்திய தேசமாக எழுவதைப் பொறுக்க முடியாத பிராந்திய - உலக வல்லரசுகள் தங்களது நலன்களுக்காக எங்கள் தேச விடுதலையை அடக்கி ஒடுக்க சிங்கள தேசத்திற்கு துணை நின்றது.

போராட்டம் அதுவும் ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டது. ஆனாலும் முப்பது ஆண்டுகளாக தந்தை செல்வா ஊட்டிய விடுதலை உணர்வும் முப்பது ஆண்டுகளாக தலைவர் பிரபாகரன் ஊட்டிய தன்மானம் நிறைந்த போராட்டமும் தமிழினம் உரிமை பெற்ற இனமாக வாழும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும். சத்திய வேள்வியில் தமிழினம் வெற்றி அடைந்தே தீரும். தந்தையின் ஆத்மாவும் சரித்திர நாயகனின் ஆத்மாவும் ஈழத்தமிழினத்தை மண்டியிட வைக்கப் போவதில்லை.

தந்தை செல்வாவின் 125வது பிறந்த நன்நாளைக் கொண்டாடும் நாம் அவரது கனவு நனவாக ஓரணியாக ஒன்றுபட்டு போராடுவோம். இதுவே தந்தைக்கு நாம் செய்யும் மிகப் பெரிய கைமாறாகும்.

T.K.பரமேஸ்வரன்

**(31 மார்ச் 2023 தந்தை செல்வா அவர்களின் 125வது பிறந்த நாளாகும்)**

# கச்சதீவில் கட்டப்பட்டது பௌத்த விகாரை அல்ல! கடற்படையினர் வழிபட்ட கட்டப்பட்ட புத்தர் சிலையாம்!



புனித அந்தோனியார் தேவாலயத்தைத் தவிர கச்சத் தீவில் வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை என்றும், கச்சத் தீவில் வேறு எந்த விகாரையோ அல்லது மத நினைவுச்சின்னத்தையோ கட்டும் எண்ணம் கடற்படைக்கு இல்லை என்றும் இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

கச்சத்தீவில் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதற்கு கடற்படை இலக்கு வைத்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளை அடுத்து கடற்படையினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கச்சத்தீவு நிலப்பரப்பில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் உள்ள மக்கள் வசிக்காத தீவு ஆகும். கச்சத்தீவைச் சுற்றியுள்ள பாதுகாப்பைக் கையாள்வதற்காக இலங்கை கடற்படை ஒரு கடற்படைப் பிரிவை நிறுவியுள்ளது. இலங்கை கடற்படையின் பௌத்த சங்கத்தின் அனுசரணையின் கீழ் கட்டப்பட்ட புனித அந்தோனியார் தேவாலயத்தை பாதுகாப்பு கடமைகளுக்கு மேலதிகமாக கடற்படையினர் கவனித்து வருகின்றனர். கச்சத்தீவு தேவாலய திருவிழாவைத் தவிர, வருடத்தின் மற்ற நாட்களில், கடற்படையினர் தேவாலய வளாகத்தை சுத்தம் செய்து தேவாலயத்துடன் தொடர்புடைய அனைத்து சடங்குகளையும் மிகுந்த பக்தியுடன் செய்வதாக கடற்படை தெரிவித்துள்ளது. கச்சத்தீவு கடற் பரப்பில் உள்ள கடற்படை வீரர்கள் பெரும்பாலானவர்கள் பௌத்தர்கள் என்பதால் அவர்களின் அங்கு உள்ள சிறிய புத்தர் சிலையை வணங் குவதாக அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் யாழ்ப்பாண மாவட்ட செயலருக்கு வலியுறுத்தியுள்ளார்.

## கடவுள்களைக் காப்பாற்ற போராடும் மக்கள்

வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள சிவலிங்கம் சிதைக்கப்பட்டு, அப்பகுதியை பௌத்த மயமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் அதன் வேலையை மீண்டும் மேற்கொண்டிருக்கின்றது. குருந்தூர் மலையில் வெற்றிகரமாக பௌத்த விகாரையை நிறுவியிருக்கும், தொல்பொருள் திணைக்களம் தற்போது, இந்துக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவலிங்க வழிபாட்டு பகுதியையும் இலக்கு வைத்திருக்கின்றது.

இலங்கையில் எதுவும் நடக்கலாம் எவரும் ஆட்சியில் அமரலாம் கீழிறங்கலாம் ஆனால் தொல்பொருள் திணைக்களம் மட்டும் அப்படியே, அப்பழுக்கற்ற பௌத்த சேவையை முன்னெடுத்து வருகின்றது. அது எப்படி? தொல்பொருள் திணைக்களம் உண்மையிலேயே அரசாங்க கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றதா அல்லது, பௌத்த மகா சங்கங்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதா? எவ்வாறு தொல்பொருள் திணைக்களம் அரசாங்க உத்தரவுகளை மீறியும் செயற்பட்டு வருகின்றது? இலங்கை பஞ்ச ஈஸ்வரங்களால் நிர்வகிக்கப்பட்ட ஒரு நாடென்று, இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்களே குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இலங்கைக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடக் கூடாதென்னும் நோக்கில், இலங்கையை காக்கும் காவல் தெய்வங்களாகவே பஞ்ச ஈஸ்வரங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இலங்கையின் கரையோரங்களை அண்டிய பகுதிகளில் இந்த ஆலயங்கள் நிறுவப்பட்டிருப்பதை நாம் காணலாம். ஆனால், இப்போது அந்த காவல் தெய்வங்களை பாதுகாக்க தமிழ் இந்துக்கள் பாடுபட வேண்டியிருக்கின்றது. கடவுள் மக்களை பாதுகாப்பார் என்னும் நம்பிக்கை சிதைந்து, கடவுள்களை மக்கள் காப்பாற்றவேண்டியிருக்கின்றது.

புத்தரின் பலத்திற்கு முன்னால் சிவன் அனைத்து இடங்களிலும் தோற்றுக்கொண்டேயிருக்கின்றார். இலங்கையின் சிவனை காப்பாற்ற சிவசேனையாலும் முடியவில்லை, ஆர்.எஸ்.எஸ் ஆலும் முடியவில்லை. இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு விஜயம் செய்தபோது, பௌத்த பிக்குகளின் காலில் விழுந்து வணங்கியிருந்தார்.

பௌத்தர்களும் இந்துக்கள் தான் என்னுமடிப்படையில் தான் மோடி, அவ்வாறு செய்திருந்தார். ஆனால் இலங்கைத் தீவின் பௌத்தம், இந்துக்களை சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்போவதில்லையென்றே சூளுரைக்கின்றது. அதன் வெளிப்பாடாகவே சிவலிங்க உறைவிடங்களை பௌத்த மயப்படுத்தும் திட்டத்தை வேகப்படுத்தியிருக்கின்றது. இந்துக்களின் குரலை செவிமடுக்க, அவர்களுக்கு அபயமளிக்க எவருமில்லை. (22ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# அடையாளங்களை அழிக்கும் சிங்கள இனவாத அரசியல்!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக
யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதாகக் கருதப்படும் நிலையில், நாட்டில் மீண்டும் இனவாதம் மற்றொரு வடிவத்தில் தீவிரமடைந்து வருகிறது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்ற கோட்பாட்டை வலுவிழக்கச் செய்வதை இலக்காகக் கொண்டு திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களுடைய அடையாளங்களை இல்லாமல் செய்வதை நோக்கமாகக்கொண்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பது தான் தமது இலக்கு எனக் கூறிக் கொண்டாலும் கூட மறுபுறத்தில் அரசாங்கத்தின் கட்டமைப்புக்கள் இனக் குரோதத்துடனேயே செயற்படுகின்றன. தமிழ் மக்களுடைய பாரம்பரிய வாழ்விடங்களை ஆக்கிரமித்து – தமிழ் மக்களுடைய வரலாற்றை முற்றாகத் துடைத்தெறிவதை நோக்கமாகக் கொண்டே இந்த செயற்பாடுகளை அரச இயந்திரங்கள் துரிதப்படுத்தியிருக்கின்றது.

இலங்கையின் வரலாற்றின் சைவ சமயம் பெற்றிருந்த முக்கியத்துவம் வரலாறுகள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. 1,500 வருடங்களுக்கு முன்னர் போத்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இலங்கையின் பல பகுதிகளிலும் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் சைவ ஆலயங்கள் இருந்துள்ளன என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இதனை சிங்களப் பேராசிரியர்கள் பலர் கூட தமது ஆய்வுகளில் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றில் பெரும்பாலானவை அந்நியர் ஆட்சியில் அழிக்கப்பட்டன. இவற்றில் சில அவை இருந்த இடத்திலேயே புனரமைக்கப்பட்டன. சில ஆலயங்கள் இருந்த இடங்கள் கூட தெரியாமல் அழிக்கப்பட்டன.





முப்பது வருட காலமாக நடை பெற்ற போர் காரணமாக இராணுவ ஆக்கிரமிப்புடன் தமிழர்களின் பாரம்பரிய இடங்கள் அழிக்கப்பட்டன. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டிடங்களை தொல்லியல் என்ற பெயரில் பௌத்த புராதன இடங்களாக மாற்றினார்கள். இதன் மூலமாக தமிழர்களை வலுவிழக்கச் செய்தார்கள். போர் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் இச் சம்பவங்கள் நடைபெற்றதால் போரின் ஒரு பகுதியாகவே இவை மறைந்து போயின.

ஆனால், போர் முடிவடைந்த பின்னரும் இதனைத் தொடர்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தொல்லியல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனத் திணைக்களம் என்பன இதற்கான செயற்பாடுகளை நன்கு திட்டமிட்ட முறையில் இரகசியமாக முன்னெடுக்கின்றன.

சைவத்துக்கும் பௌத்தத்துக்கு நெருக்கமான தொடர்பு உள்ளது. இலங்கையில் தமிழர்கள் பலர் பௌத்தத்தை தழுவியவர்களாக இருந்துள்ளார்கள் என்பது வரலாறு. பௌத்தர்கள் அனைவரும் சிங்களவர்களல்ல. ஆனால், வட இலங்கையில் பௌத்த சின்னம் ஒன்று காணப்படுமானால், அதனை அடிப்படையாகக் கொண்டு அது சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசம் என தொல்பொருள் திணைக்களம் முடிவெடுப்பதும், அதற்காக இராணுவப் பாதுகாப்பு போடப்படுவதும் சிங்களவர்கள் கொண்டு வரப்பட்டு குடியேற்றப்படுவதும் நடை பெறுகின்றது.

தமிழ்ப் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள் என்பதை வரலாற்றாசிரியர்கள் பலரும் ஏற்றுக் கொள்கின்ற போதிலும், இலங்கை அரசாங்கத்தின் இயந்திரங்களாக இருக்கும் தொல்லியல் திணைக்களம் போன்றனவும், அரசியல்வாதிகள் சிலரும் இதனை வேண்டுமென்றே ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள்.

கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து போன்ற நாடுகளிலும் பெருமளவு பௌத்த சின்னங்கள் உள்ளன. அதற்காக அந்த நாட்டு மக்களையும் சிங்களவர்கள் எனக் கூறிவிட முடியுமா?

வெறுமனே பௌத்த அடையாளத்தை மட்டும் வைத்துக் கொண்டு வடக்கில் சிங்களவா்கள் வாழ்ந்தார்கள் எனக் கூறுவதும், சைவ அடையாளங்களை அழிப்பதும் நன்கு திட்டமிட்ட இன அழிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

கீரிமலையில் இருந்த ஆதி சிவன் ஆலயம் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது நெடுக்குநாறிமலை சிவன் ஆலய விக்கிரகங்கள் அழிக்கப்பட்டுள்ளன. குருந்தூர் மலையிலும் இது தான் நடந்தது. கச்சதீவில் புத்தர் சிலை வைக்கப்பட்டு, அரச மரங்கள் கொண்டு செல்லப்பட்டு நாட்டப்பட்டுள்ளன. நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை பௌத்த சிங்கள அடையாளமாகக் காட்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. திருகோணமலையிலும் இதுபோன்ற நெருக்கடிகள் உருவாகியிருக்கின்றது.

கீரிமலை ஆதி சிவன் ஆலயப்பகுதியிலிருந்து காங்கேசன்துறை வரையிலான பகுதிகள் கடந்த 33 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் பெருமளவுக்கு இராணுவம் குவிக்கப்பட்டும் இருந்தது. இதனால், அந்தப் பகுதிக்கு பொதுமக்கள் யாரும் செல்ல முடியாத நிலை இருந்தது. இங்கிருந்த சிவன் ஆலயம், கிருஷ்ணர் கோவில், கதிரமலைநாதன் கோவில் போன்றவற்றுக்கு மக்கள் செலல முடியவில்லை.

அண்மையில் கிருஷ்ணர் கோவிலை பராமரித்து வந்த மூவர் விஷேட அனுமதி பெற்று அந்தப் பகுதிக்குச் சென்றிருந்த போதே அவர்களுக்கு அிர்ச்சிகள் காத்திருந்தன. ஆதி சிவன் ஆலயம் அவ்விடத்தில் இல்லை. சித்தர் சடையம்மா மடம் முற்றாக அழிக்கப்பட்டிருக்கின்றது. அவரது சமாதியும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது. பெண் சித்தர் சடையம்மாள் 1936 ஆம் ஆண்டு அங்கு வந்து தங்கி பின்னர் அங்கேயே சமாதியானதாக தகவல்கள் கூறுகின்றன. அவரை விட மேலும் பல சித்தர்கள் அந்தப் பகுதியில் இருந்துள்ளார்கள் என்றும் அவர்களுடைய சமாதிகள் அங்கே இருந்ததாகவும் தகவல் உள்ளது. அவை அனைத்துமே அழிக்கப்பட்டுள்ளன.



போர் ஒன்றை நடத்தாமல் – வெறுமனே தொல்பொருள் திணைக்களத்தை மட்டும் பயன்படுத்தி தமிழ் மக்களின் தாயகத்தையே இல்லாமல் செய்து அவற்றை சிங்களப் பிரதேசங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொல்பொருள் திணைக்கம் தான் இவற்றை முன்னெடுப்பதால் அரசாங்கம் இதற்கும் தனக்கும் தொடர்பு இல்லை எனக் காட்டிக் கொள்கின்றது. சர்வதேச ரீதியாக வரக் கூடிய விமர்னங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இந்த உபாயத்தை அரசாங்கம் கையள்கின்றது.

அரசாங்கம் இவ்வாறு தான் செயற்படும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இவற்றை அம்பலப்படுத்துவதும், அவற்றை நிறுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதும் தான் தமிழ்த் தலைமைகளின் பணியாக இருக்க வேண்டும். ஆனால், தமிழ்த் தலைமைகள் வெறுமனே அறிக்கைகள், கவனயீர்ப்புப் போராட்டங்கள் என்பவற்றுடன் தமது பணியை நிறுத்திக் கொள்கின்றன. அவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களில் கூட நூறுக்கும் அதிகமானவர்களைக் காணமுடிவதில்லை.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் எவை, அவற்றை அபகரிப்பதற்காக அரசாங்கம் எவ்வாறான உபாயங்களைக் கையாள்கின்றது என்பதை ஆவணப் படுத்துவதற்கான முயற்சிகள்போதுமானவையாக இல்லை. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெறும் நிலையிலேயே இவ்வாறான ஆக்கிரமிப்புக்களை அரசாங்க இயந்திரங்கள் செய்வதற்கு அவைதான் காரணம்.

அதாவது தமிழ்த் தரப்பின் பலவீனம் தான் இவ்விடயத்தில் அரசாங்கத்துக்குப் பலத்தைக் கொடுக்கின்றது. சர்வதேச ரீதியாக ஐ.நா. உட்பட அதனுடன் தொடர்புபட்ட அமைப்புக்களுக்கு போதுமான ஆவணங்களை வழங்கி, இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கு தமிழ்த் தலைமைகள் முன் வர வேண்டும்.

இல்லையெனில் வெறுமனே அறிக்கைகளை நாம் வெளியிட்டுக் கொண்டிருக்க அவர்கள் தமது வேலையை வெற்றிகரமாகச் செய்து கொண்டு போவதை தடுக்க முடியாமலிருக்கும்.

## இந்துத்துவ சார்பு நிலை தமிழ்த்தேசியத்தைச் சிதைக்குமா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) இந்துத்துவா சார்புநிலையாகும். அதாவது, ஆளும் பி.ஜே.பி.க்கு நெருக்கமாகுவதன் மூலம் இந்தியாவின் வெளிவிவகார அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தலாமென்னும் வாதமொன்று மேலோங்கியது. இந்த வாதத்தை முன்வைப்பவர்கள் கூறும் பிறிதொரு விடயம், தமிழ்நாட்டோடு நின்றால், இந்தியாவுடனான எங்களுடைய உறவு, தென்னிந்தியாவுடன் மட்டுப்பட்டு விடும். ஆனால் இந்துத்வா சார்புநிலையை கைக்கொண்டால் இந்தியா முழுவதும் தொடர்புகளை ஏற்படுத்தலாம். நமக்கு எது தேவை? தென்னிந்தியாவுடன் மட்டும் நிற்பதா அல்லது, முழு இந்தியாவுடனும் உறவாடுவதற்கான வாய்ப்புகளைத் தேடுவதா?

பரந்தளவிலான வாய்ப்புகளை தேட வேண்டுமாயின், நாமும் பரந்தளவில் தான் சிந்திக்க வேண்டும். இவ்வாறு கூறுபவர்கள், இந்துத்வா சார்புநிலையை வந்தடைந்திருக்கின்றனர். இந்துத்துவ சார்புநிலை தமிழர்களுக்கு கைகொடுக்குமா? இதற்கு உடனடியாகவே இல்லையென்றோ அல்லது ஆம் என்றோ பதிலளித்து விட முடியாது. ஆனால் சில விடயங்களை கையாண்டு பார்ப்பதில் தவறில்லை. ஏனெனில் ஏற்கனவே பல்வேறு விடயங்களைக் கையாண்டு தமிழர்கள் தோற்றுப் போமிருக்கின்றனர். ஒவ்வொரு தோல்வியும் சில அனுபவங்களை தந்திருக்கின்றது. ஆனால் பி.ஜே.பி. ஆட்சியிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்துத்வா என்பது இந்தியாவில் சக்தி வாய்ந்த ஒன்றாகத்தான் இருக்கப் போகின்றது.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

25 மார்ச் 2023 முதல் 31 மார்ச் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம்

புங்குடுதீவு 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 24 மார்ச் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு பிறேம்குமார்

யாழ்ப்பாணம் அரியாலைப் பிறப்பிடமாகவும் கனடா வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களுடைய மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 26 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு பிறேம் குமார் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு வட்டக்கச்சி ஆகிய இடங் களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்தினி அம்மா வைத்தியநாதன் அவர்களின் எட்டாவது ஆண்டு நினைவு நாள் 02 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பத்தினிஅம்மா வைத்தியநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 31 மார்ச் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஈழத்துச் சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகள் 59வது மகா சமாதிக் குருபூசை கனடாவில்

சித்தர் தவத்திரு சிவயோக சுவாமிகள் 59வது மகா சமாதிக் குரு பூசை எதிர்வரும் பங்குனி அயிலிய நட்சத்திரம். 01ஏப்ரல் 2023 சனிக்கிழமையன்று பின்வரும் விலாசத்தில் காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரையும் நடைபெறும்.

RICHMOND HILL-PILLAIYAR TEMPLE
CULTURAL HALL
10865 Bayview Ave-
Richmond Hill - ON L4S 1M1

சுவாமிகளின் அடியார்கள் மற்றும் அன்பர்கள் யாவரும் குரு பூசையில் பங்கு பற்றி அருளாசி பெற்றும் பிரசாதத்தையும் பெற் றும் செல்லுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம் .

சிவயோக சுவாமிகள் திருவடி நம்பிக்கை நிதியம்

தொடர்புகளுக்கு

தி. சிவயோகபதி - 416 335 5458


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




24 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குலசேகரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு பிறேம்குமார் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 மார்ச் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் சிவஸ்ரீ சிவா குருக்கள் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் சிவஸ்ரீ சிவா குருக்கள் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 மார்ச் 2023 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



29 மார்ச் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு குமரேசு கெங்காதரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு குமரேசு கெங்காதரன் அவர்கள் தனது குடும்பத்தினர், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



29 மார்ச் 2023 புதன்கிழமை திரு சின்னையா இராஜேந்திரம் திருமதி இராஜேந்திரம் திரேசம்மா திரு இராஜேந்திரம் யேசுதாசன் திரு இராஜேந்திரம் தேவதாசன் திருமதி தேவதாசன் லூர்துமேரி ஆகியோரது நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





2338 HURONTARIO ST., UNIT 100A,
MISSISSAUGA, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: 289.569.0169

Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

Gayatiri Thavan

Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca




31 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விசுவலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



எமது புனிதபூமி அன்பு இல்லம், பாரதி இல்லம் செஞ்சோலை இல்லம் குழந்தைகளின் கருத்துக் கருவூலமாக பட்டமரத்தில் தளிர் என்ற கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. அதன் முன்பக்க அட்டையே இதுவாகும்.

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN $93



weekly - Plus TAX

$0 down @ 6.58%

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

CANADIAN BUILT

**2023 CIVIC LX Model**




## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA
LEXUS | ACURA
BMW | AUDI

**CIVIC**
20 in stock

**CR-V**
15 in stock

**ACCORD**
10 in stock

**ODYSSEY**
10 in stock

**2023 CR-V HYBRID Available**

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



tonymidtown@hotmail.com

**Tony Siva** 647.269.0749

Sales & Leasing Executive

# சிலை அரசியல்:- அறிவும் செயலும்

வடக்கில் கடந்த ஒரு கிழமைக்குள் மட்டும் மூன்றுக்கு மேற்பட்ட சிலைகள் திறக்கப்பட்டுள்ளன. நடராஜர் சிலை, வள்ளுவர் சிலை, சங்கிலியன் சிலை, என்பவற்றோடு திருநெல்வேலி சந்தையில் மணிக் கூட்டுத் தூபி ஒன்று.

இச்சிலைகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியலை கடந்த வாரக் கட்டுரையில் ஓரளவுக்குப் பார்த்தோம். இச் சிலைகளுக்குப் பின்னால் இருக்கும் மத அரசியலைத் தனியாயகப் பார்க்க வேண்டும். இன்று இக் கட்டுரையானது இச்சிலைகளின் அழகியல் அம்சங்களைக் குறித்த விவாதக் குறிப்புகள் சிலவற்றை முன்வைக்கின்றது.

பொதுவெளிச் சிற்பங்கள் அவற்றை நிறுவும் நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் விருப்பங்களை மட்டும் பிரதிபலிப்பவை அல்ல. அதைவிட ஆழமான பொருளில் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை, அழகியல் உச்சங்களை, அரசியல் கலாச்சார பல்வகைமையை வெளிக்காட்டுபவைகளாக அமைய வேண்டும்.ஒரு வெளிப்பார்வையாளர் கண்டு வியக்கும் அளவுக்கு அது ஒரு வெற்றி பெற்ற கலைப் படைப்பாக அமைய வேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சில பொதுச் வெளிச் சிற்பங்களை அல்லது சிலைகளை அல்லது தூபிகளைப் பார்க்கலாம்.



முதலில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் சிலையிலிருந்து தொடங்கலாம். இச் சிலை ஒரு வழிபாட்டு உருவாகத் தான் அந்த சந்தியில் நிறுத்தப்பட்டுள்ளது. இச்சிலையை உருவாக்கியவர்கள் அதனை ஒரு வழிபாட்டு நோக்கத்தையும் மனதில் வைத்து உருவாக்கியிருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது. அப்படியென்றால் தங்களுடைய இஷ்ட தேவதையை சிலையாக்கும் போது அதன் அழகியல் முழுமை குறித்து ஆகக் கூடிய பட்ச கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டும்.

உதாரணமாக ஒருவர் தனக்கு மிகவும் பாசத்துக்குரிய தன் தாய்க்கு ஒரு சிலை வைக்கும் போது அச் சிலை தாயைப் போலவே இருக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்ப்பார் அது வேறு யாரையோ போல இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பாரா? இல்லைத் தானே? இது ஆஞ்சநேயருக்கும் பொருந்தும்.

ஆஞ்சநேயரின் ஆகிருதியைக் காட்டுவது தான் சிலையின் நோக்கம் என்றால் அதற்கென்று செலவழிக்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்குரிய துறைசார் நிபுணர்களை அணுக வேண்டும்.அதை ஒரு தவமாகச் செய்ய வேண்டும். ஆனால் மருதனார்மடம் ஆஞ்சநேயர் தமிழ் அழகியலின் வீழ்ச்சியின் குறியீடாக நிற்கிறார். அவருடைய முகத்துக்கும் உடலுக்கும் இடையிலான அளவுப் பிரமாணம் பிழைத்து விட்டது. அதனால் அது ஒரு கறாளையான சிலை.

இத்தனைக்கும் அச்சிலை இருப்பது யாழ் பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறை அமைந்திருக்கும் வளாகத்தில் இருந்து சில நூறு மீட்டர் தொலைவில் தான். ஆனால் பல்கலைக்கழகத்தின் இது சம்பந்தப்பட்ட துறைசார் ஆளுமைகளிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டு ஆஞ்சநேயர் சிலை கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. அல்லது குறைந்த பட்சம் அந்த வளாகம் வளர்ச்சியடைந்த பின்னராவது அது தொடர்பான ஆலோசனைகள் பெறப்பட்டதாகத் தெரியவில்லை.ஆயின்.யாழ் பல்கலைக் கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் கற்பிக்கப்படுகின்ற சிற்பம் தொடர்பான அழகியல் அறிவிற்கும் ஆஞ்சநேயருக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. அதாவது அறிவுக்கும் செயலுக்கும் இடையிலுள்ள இடைவெளி.

இந்த இடைவெளி தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரும்பாலான பொதுச் சிற்பங்களுக்குப் பொருந்தும்.

மருதனார்மடம் ஆஞ்சநேயர் மட்டுமல்ல, ஆனையிறவுச் சிவனின் மீதும் அவ்வாறான விமர்சனங்கள் உண்டு. அதை உலோகத்தில் வார்த்திருந்தால் அதன் அழகு மேலும் பொலிந்திருக்கும் என்ற ஒரு கருத்து உண்டு. மேலும் அச்சிலையை வடிவமைக்கும் போதும் அது தொடர்பான துறைசார் நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டதா என்ற கேள்வி உண்டு.

சிவ நடனம் எனப்படுவது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதைப் போல ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது. அப் பிரபஞ்ச அசைவை ஒரு அசையாச் சிலைக்குள் கொண்டு வருவதற்கு மகத்தான சிற்பிகள் தேவை. அசையாச் சிலை ஒன்று பிரபஞ்சப் பேரசைவைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அது ஓர் அழகியல் சவால். சுந்தர ராமசுவாமி கூறுவது போல ஒரு வேட்டை நாயின் பாய்ச்சலை ஓர் ஒளிப் படத்துக்குள் கைப்பற்றுவது போல.

ஆனால் நடராஜர் சிலையை வடிவமைக்கும் போது அது தொடர்பான துறைசார் நுட்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உரிய துறைசார் நிபுணர்களோடு அது தொடர்பாக உரையாடப்பட்டதாகவும் தெரியவில்லை. இது ஆஞ்சநேயருக்கும் நடராஜருக்கும் மட்டுமல்ல, முத்திரச் சந்தையடி சங்கிலியன் சிலையும் உட்பட, தமிழில் பெரும்பாலான பொதுவெளிச் சிற்பங்களுக்கும் பொருந்தும்.

தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு தூண்களில் தொடங்கி முள்ளிவாய்க்கால் நினைவுச் சிற்பம் வரையிலும் நிலைமை அப்படித் தான் காணப்படுகிறது. உரும்பிராயில் சிவகுமாரன் சிலையில் தொடங்கி வவுனியாவில் பத்மநாபா சிலை வரையிலும் நிலைமை அதுதான். அவரவர் தன் வசதிக்கேற்ப தன் அழகியல் புரிதலுக்கு ஏற்ப சிலைகளை உருவாக்குகிறார்கள். ஆனால் அது ஒரு மக்கள் கூட்டத்தின் கலை மேதமையை பிற நாட்டவர்கள் கண்டு பிரமிக்கும் அளவுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற அடிப்படை விஷயத்தைத் தவற விடுகிறார்கள்.

இதில் ஆகப்பிந்தியது கடந்த வாரம் திருநெல்வேலிச் சந்தியில் திறக்கப்பட்ட மணிக்கூட்டுடன் கூடிய ஓர் அலங்காரத்தூபி. அது யாழ் பல்கலைக்கழக சுற்றுச் சூழலுக்குள் காணப்படும் ஒரு சந்தி. அதுவும் பண்ணைச் சுற்று வளைவைப் போலவே பிற சமூகங்கள் புழங்கும் ஒரு சந்தி. யாழ்ப்பாணத்தின் உயர் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு மிக அருகில் காணப்படும் அச் சந்தியில் வைப்பதற்கு அந்த ஊரைச் சேர்ந்த

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**



முன்னோடிகள் அல்லது நிறுவன உருவாக்கிகள் என்று கூறத்தக்க யாருடைய சிலையும் இல்லையா? கடந்த வாரம் திறக்கப்பட்ட சிறுதூபி தமிழ் மக்களின் அழகுணர்ச்சியை வெளிப்படுத்துகின்றதா? தமிழ் மக்களின் பெருமைகளைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்றதா?

ஏன் அதிகம் போவான் யாழ். பல்கலைக் கழகத்தில் கட்டப்பட்டிருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம்கூட ஓர் அழகியல் முழுமை என்று கூற முடியாது. அதிர்ச்சியூட்டும் நவீனம் என்று கூற முடியாது. உலகிலுள்ள இதுபோன்ற நினைவுச் சின்னங்களோடு ஒப்பிடுகையில் அது மிகவும் சாதாரணமானது.

ஒரு பல்கலைக்கழக வளாகத்தில் காணப்படும் நினைவுச் சின்னத்தின் நிலைமை அதுவென்றால், அதுவும் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் தனது உயர்கல்வி நிறுவனத்தில் அப்படித் தான் ஒரு நினைவுத் தூபியைக்க கட்டுமென்றால், அதிலிருந்து சற்றுத் தள்ளியிருக்கும் ஏனைய பொது வெளிச் சிற்பங்கள் பற்றி அதிகம் பேசத் தேவையில்லை. இது ஒரு பொதுவான போக்காக தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

ஈழத்தமிழர்கள் மத்தியில் பொது வெளிச் சிற்பங்களை உருவாக்கும் பலரும் அது தொடர்பான துறைசார் நிபுணர்களை அணுகுவதில்லை என்பதைத் தான் பெரும்பாலான சிற்பங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இதில் மிக அருந்தலான புற நடைகளை உண்டு. அப்புறநடைகள் யாவும் அதற்குரிய துறைசார் அறிவுடையோரால் உருவாக்கப்பட்டவை.

இவ்வாறான சிலைக் கலாசாரத்தின் பின்னணியில்.சிலை அரசியலின் பின்னணியில், பண்ணைச் சுற்று வளைவில் நிறுவப்பட்டிருக்கும் திருவள்ளுவரை இனிப் பார்ப்போம். அச்சிலைக்குப் பின்னால் உள்ள மொழி,மத அரசியல் குறித்து ஏற்கனவே சமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பரவலாக வாதப் பிரதிவாதங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. இங்கு அச்சிலையின் அழகியல் அம்சங்களை மட்டும் கவனிப்போம்.

கண்ணாடி நாரிழையில் செய்யப்பட்ட அச்சிலையானது தமிழ்நாட்டைச் சேர்ந்த விஜிபி குழுமத்தின் தலைவர் சந்தோசம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். இலங்கையின் எல்லா மாவட்டங்களுக்கும் மொத்தம் 18 சிலைகளை அவர் வழங்கியிருக்கிறார். அதில் இரண்டு வடக்கு கிழக்குக்கு ஒன்று திருகோணமலைக்கு. மற்றது யாழ்ப்பாணத்திற்கு. இச்சிலைகள் யாவும் மலிவானவை. அவற்றின் அழகியல் அம்சங்கள் குறித்து விவாதிக்க அதிகமில்லை. ஆனால் பண்ணைச் சுற்று வளைவில் அச்சிலை வைக்கப்பட்டிருக்கும் இடம், அதன் பின்னணி என்பவற்றைத் தொகுத்துப் பார்க்கும்(22ம் பக்கம் பார்க்க)

# வேலணை மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு விஜயரட்ணம் அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி

வேலணை முதலாம் வட்டாரத்தில் இளையதம்பி பாக்கியலட்சுமி தம்பதியினரின் இளைய மகனாகப் பிறந்த திரு விஜயரட்ணம் அவர்கள் கடந்த வருடம் மார்ச் மாதம் 27ம் திகதி (27-3-2022) கனடாவில் காலமான செய்தி எல்லோரும் அறிந்ததே. இந்தியப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற இவர் வேலணை மத்திய கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

அன்னாரது மனைவி திருமதி ஈஸ்வரி விஜயரட்ணம் அவர்களும் வேலணை மத்திய கல்லூரியின் நீண்ட கால ஆசிரியை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இத் தம்பதியினருக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவர்கள் விஜயலட்சுமி விஜயகலா ஆகிய பெண் பிள்ளைகள். முதலாவது ஆண்மகன் தனது நான்காவது வயதில் 1969ம் ஆண்டு இறந்தார். நான்காவது ஆண்மகன் தேவகுமார் பத்தொன்பதாவது வயதில் 1989ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். இது ஒரு துன்பியல் நிகழ்வு.

என்றுமே கலகலப்பாகச் சிரித்துப் பேசி மகிழ்வாக இருந்த தம்பதிகள் இச்சம்பவத்தின் பின்னர் நடைபிணங்களாகவே வாழ்ந்து வந்தனர். எந்தத் துன்பத்தையும் சுலபமாக மறந்து விடும் இவர்களால் இதை மறக்க முடியவில்லை. ஒரு பெரிய துணை வலிமை நீங்கி விட்டது போன்ற பிரமை இவரை வாட்டியது. பாசமிகு மைந்தன் தேவகுமாரின் எதிர்பாராத இழப்பால் ஏற்பட்ட விரக்தியின் காரணமாக சொந்த நாட்டில் வாழப் பிடிக்காமல் கனடாவில் குடியேறினார். தவிர்க்க முடியாத காரணத்தால் இவரது இறுதி நிகழ்வில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. விதியின் விபரீதப் போக்கு என் விழி நீரைப் பெருக்கியதே தவிர என் இனிய ஆசானின் இன்முகத்தைக் காண எனக்கு வாய்ப்பளிக்கவில்லை.

வேலணை மத்திய கல்லூரியில் நீண்ட காலம் பௌதீகவியல் பாடம் கற்பித்த மாண்பமை ஆசிரியர். தன் புகழ் பேசி உயர்பவர்கள் மத்தியில் தன் குணம் பேசி ஈர்த்த உயர்ந்த மனிதர். நிறம் மாறாத பண்பாளர். நான் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் இறுதி ஆண்டில் படித்த போது இவரே எனது வகுப்பாசிரியரும் பௌதீகவியல் ஆசானும் ஆவார்.

கற்பித்தல் துறையின் உள்ளீட்டை உயர்த்தியோர் வரிசையில் இவரது பெயர் என்றும் நிலைக்கும். என்பதில் எதுவித ஐயமும் இல்லை. எனது கல்வி வளர்ச்சிக்கு பல ஆலோசனைகளை வழங்கியதோடு இறுதிப் பரீட்சைக்கு முன்னர் என்னைப் பாடசாலைக்கு வராமல் வீட்டிலிருந்து படிக்குமாறு அறிவுறுத்தியதுடன் மாணவர் வரவுப் புத்தகத்தில் பாடசாலைக்கு வந்ததாகவும் பதிவிட்டு எனது வளர்ச்சிக்கு உதவிய நன்றியை என்றும் மறவேன். இவரது துணைவியார் திருமதி ஈஸ்வரி விஜயரட்ணம் அவர்கள் 9ம் 10ம் வகுப்புக்களில் எனது விஞ்ஞான ஆசிரியை மட்டுமல்ல தாய் போல் பொறுமையுடன் எனது குழப்படிகளையெல்லாம் சகித்து என்னை ஆளாக்கியவர்களில் ஒருவர் என்றால் அது மியையல்ல.



அறஞ் சார்ந்த நல்ல செயல்களைச் செய்து வந்தால் கோயிலுக்கே போகத் தேவையில்லை என அடிக்கடி கூறுவார். என் போன்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் நெஞ்சங்களில் ஆசிரியர் ஊட்டிய உணர்வுகள் அப்படியே இருக்கின்றன.

இவரது மூத்த மகள் கலாநிதி விஜயலட்சுமி சிறீகெங்கன் எனது காலத்தில் வேலணை மத்திய கல்லூரியிலும் யாழ் பல்கலைக்கழகத்திலும் படித்தவர். தற்போது பெரிய பிரித்தானியாவில் பௌதீகவியல் பேராசிரியராக இருக்கின்றார். ,ளைய மகள் கலாநிதி திருமதி விஜயகலா சிவதேவன் கனடாவில் பல்மருத்துவராகத் தொழில் புரிகின்றார். அருமைப் புதல்வன் தேவகுமார் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகள் பெற்றவர்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் ஒட்டுக்குழுக்களால் இவர் படுகொலை செய்யப்பட்டமை மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட ஈவிரக்கமற்ற செயலாகும்.

அவரது புகழை எழுத வேண்டிய கைகள் மறைவை எழுதும் நிலையாகி விட்டமை பெருந் துயரமாகும். திறமைசாலிகள் எப்போதோ தான் தோன்றுகிறார்கள் ஆனால் மறைவது மட்டும் சீக்கிரமாக மறைந்து விடுகிறார்கள். இதற்குத் தேவகுமாரும் விதிவிலக்கல்ல.

ஒரு நாள் பழகினாலும் உயிரோடு அணைத்துக் கொண்டு விடும் ஆற்றல் கொண்ட ஆசிரியர் திரு விஜயரட்ணம் அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் மனைவி பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரி வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டுகிறேன். ஓம் சாந்தி !

**சி. இளஞ்செழியன்**

பழைய மாணவர் (1975 - 1982)

வேலணை மத்திய கல்லூரி



# இந்துத்துவ சார்பு நிலை தமிழ்த்தேசியத்தைச் சிதைக்குமா?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



நமது அரசியல் சூழலில், இந்துத்துவ தொடர்பில் பேசுகின்ற, விவாதிக்கின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது. இந்துத்துவா என்பது தற்போது இந்தியாவை ஆட்சி செய்யும் பாரதீய ஜனதா கட்சியினால் முன்னிலைப்படுத்தப்படும் தேசியவாத கருத்தியலாகும். இது ஆர்.எஸ். எஸ். அமைப்பின் ஸ்தாபகர் சாவகரால் முன் வைக்கப்பட்டது. இந்துவாக இருப்பது என்பது தான் இதன் உள்ளடக்கமாகும்.

ஈழத்தமிழ் அரசியல் சூழலை பொறுத்தவரையில் இது ஒரு அண்மைக் காலப்போக்காகும். குறிப்பாக இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சி பலமான நிலையில் ஆட்சியை கைப்பற்றியதைத் தொடர்ந்தே, இவ்வாறானதொரு போக்கு ஈழத்தமிழ் அரசியல் சூழலில் துளிர்விட்டது.

இப்போது அது ஓரளவு வளர்ந்திருக்கின்றது. அதற்கு நன்றாக தண்ணீரூற்றி வளர்க்க வேண்டும். அதில் தவறில்லையென்று ஒரு சாராரும் இல்லை அது ஆபத்தானதென்று இன்னொரு சாராரும் அடிக்கடி முட்டுப்படுவதை காணமுடிகின்றது. இந்துத்துவ சார்பு நிலையானது, தமிழ்த் தேசிய அரசியலை சிதைத்து விடுமென்பதே எதிர்ப்பவர்களின் வாதமாக இருக்கின்றது.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் மத்தியில் பெரியளவில் குழப்பங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் இந்த விடயத்தில் அபிப்பிராயங்களும் கூற முற்படுவதில்லை. ஆனால் கருத்துருவாக்கிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்போர் மத்தியில் தான் இந்த விடயம் அவ்வப்போது விவாதிக்கப்படுகின்றது.

அதேபோன்று புலம்பெயர் சூழலிலுள்ள சிலரும் இந்துத்வா சார்புநிலையை எடுப்பதன் ஊடாக புதுடில்லியை அணுகலாமென்று எண்ணுவதாகத் தெரிகின்றது. இதற்கு சமாந்திரமாக, உண்மையில் இன்னும் பலமாக ,இந்துத்துவ அரசியலை கையாள வேண்டுமென்னும் முனைப்பு சிங்கள ஆளும் தரப்பிடமும் காணப்படுகின்றது. இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட, இந்த விடயத்தில் பிரத்தியேகமாக செயற்பட்டு வருகின்றார்.

மொறகொட ஆர்.எஸ்.எஸ், தலைவர் மோகன் பகவத்தை சந்தித்து கலந்துரையாடுகின்றார். பி.ஜே.பி.க்கு நெருக்கமான சிந்தனைக் கூடமான விவேகானந்தா சர்வதேச நிலையத்துடன் நெருங்கிய தொடர்பை பேணிவருகின்றார். இந்தச் சிந்தனைக் கூடத்தின் பணிப்பாளராக இருந்தவரே, இந்தியாவின் தற்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசககர் அஜித்குமார் டோவால்.

ஆர்.எஸ்.எஸ். பிரமுகர்களுடன் தொடர்புகளைப் பேணுவதை, ஒரு இராஜதந்திர பணியாகவே மொறகொட மேற்கொண்டு வருகின்றார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் கட்சி தான் பி.ஜே.பி. என்பது இரகசியமான ஒன்றல்ல, இந்தியாவின் ஆட்சி இந்துத்துவ சக்திகளின் கையிலிருக்க வேண்டுமென்பதற்காகவே .ஆஸ்.எஸ். எஸ்., பாரதீய ஜனதா கட்சியை உருவாக்கியது. ஆஸ்.எஸ்.எஸ். அமைப்பு தொடர்பிலும் பிரதமர் நரேந்திர மோடி தொடர்பிலும் பலவாறான விமர்சனங்கள் உண்டு.

அண்மையில், அமெரிக்காவின் செல்வாக்குமிக்க பணக்காரரும் திறந்த சமூகமென்னும் அமைப்பின் இயக்குனருமான ஜோர்ஜ் சோரஸ், நரேந்திர மோடி தொடர்பில் தெரிவித்த கருத்துகள் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. அதே போன்று நரேந்திர மோடி, குஜராத்தின் முதலமைச்சராக இருந்த போது முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் அண்மையில் பி.பி.சி. ஊடகம் ஆவணப்படமொன்றை வெளியிட்டிருந்தது.

அதில் நரேந்திரமோடி, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் தொடர்புபட்டதாக கூறப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பி.பி.சி.க்கு எதிராக இந்தியளவில் கண்டனங்களும் எதிர்ப்புகளும் வெளியிடப்பட்டன. இவைகள் அனைத்தும் பி.ஜே.பி.யின் தேர்தல் வெற்றியை பலவீனப்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்



படுவதாகவே பி.ஜே.பி. வட்டாரங்கள் கருதுகின்றன. ஒப்பீட்டடிப்படையில் பி.ஜே.பி. பலமாக இருப்பதாகவே நோக்கப்படுகின்றது. முன்னர் எப்போதுமில்லாதளவிற்கு இந்துத்துவ சக்திகள் இந்தியாவில் எழுச்சியடைந்திருக்கின்றன. இந்த எழுச்சியின் விளைவே பி.ஜே.பி.யின் அபார வெற்றியாகும். பி.ஜே.பி.யின் வெற்றிக்கு மோடி கவர்ச்சியே பிரதான காரணமாகும். இதன் காரணமாகவே மோடியின் மீது பிரத்தியேகமாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. மோடியின் செல்வாக்கை, நன்மதிப்பை பலவீனப்படுத்துவதன் ஊடாக ஆளும் பி.ஜே.பி.யை பலவீனப்படுத்தலாமென்று எண்ணுவதற்கு வாய்ப்புண்டென்று ஒருவர் வாதிட்டால் அதனை மறுப்பது கனம் தான்.

இவ்வாறானதொரு பின்னணியில் தான், இந்துத்துவ சார்பு நிலையெடுப்பதன் ஊடாக பலமான நிலையிலிருக்கும் பி.ஜே.பி.யை நெருங்கலாமென்றும் அதன் மூலம் ஈழத்தமிழ் மக்கள் நன்மையை பெறலாமென்றும் ஒரு பார்வை, ஈழத்தமிழ் தேசிய அரசியல் பரப்பில் துளிர்விட்டது.

தமிழ்நாட்டு ஆதரவாளர்களோடு மட்டும் நிற்காமல் புதுடில்லியிலும் புதிய ஆதரவாளர்களைத் தேட வேண்டுமென்னும் போக்கொன்று உருவாகியது. ஈழத்தமிழர் அரசியலை பொறுத்த வரையில் பாரம்பரியமாக தமிழ்நாட்டோடு மட்டுமே அரசியல் ரீதியான தொடர்புகள் பேணப்பட்டிருந்தன. இன்றும் இதுதான் பிரதான போக்காக இருக்கின்றது. தமிழ்நாடு இல்லாமல் புதுடில்லியை அணுக முடியாதென்பதே இதுவரையில் இருந்து வந்த பார்வையாகும்.

ஆனால் பி.ஜே.பி.யின் எழுச்சி இந்தப் பார்வையில் உடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. வழமை போல் தமிழ்நாட்டோடு மட்டும் நின்றால், எமது அணுகுமுறையும் வழமை போல் தமிழ்நாட்டோடு மட்டும் சுருங்கி விடும். ஆனால், இந்துத்துவ சார்பு நிலையில் சிந்தித்தால், எமது அணுகுமுறை இந்தியா முழுமைக்குமானதாக இருக்கும். இதன்மூலம் புதுடில்லியை இலகுவாக அணுகலாம். இந்தியாவில் பரந்தளவிலான தொடர்பைப் பேணலாம். இவ்வாறானதொரு பார்வை ஒரு சாராரால் வலுவாக முன்வைக்கப்படுகின்றது. இதனை ஒரு சாரார் எதிர்க்கின்றனர்.

ஈழத்தமிழர் தேசியமென்பது மதச்சார்பற்றதாகும். எனவே, இந்துத்துவவை நோக்கி வளைந்தால், தமிழ்த் தேசியம் சிதைந்து விடுமென்பது அவர்களின் வாதமாக இருக்கின்றது. இந்த விடயங்களை அரசியல் ரீதியில் எவ்வாறு நோக்குவது? உண்மையில் இது அடிப்படையில் 2009 இற்குப் பின்னரான அரசியலின் விளைவாகும்.

2009வரையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூலம் ஒரு தனிநாட்டை அடைய முடியுமென்னும் பார்வையே தமிழ் பெரும்பான்மையை ஆக்கிரமித்திருந்தது. அந்த நம்பிக்கை தோல்வியடைந்த போது அடுத்தது என்ன என்னும் கேள்விக்கு பதிலளிக்கக்கூடிய நிலையில் ஈழத்திலும் புலத்திலும் எந்தவொரு கட்சியும் அமைப்பும் இருக்கவில்லை. 2009 வரையில் ஒன்றாக பயணித்த அமைப்புகள் மத்தியில் பிளவுகளும் முரண்பாடுகளும் தீவிரமடைந்தன. ஈழத்திலும் அதுவே நடந்தது. ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்திருந்தவர்கள், 2009இற்குப் பின்னரான கடந்த 13 வருடங்களில் பல கட்சிகளாக பிளவடைந்திருக்கின்றனர். தமிழ்த் தேசியத்தின் பெயரால் அவர்களை ஒன்றுபடுத்த முடியவில்லை. தமிழ்த் தேசியத்தின் பெயரால் அவர்களை ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்க முடியவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால், கடந்த 13 வருட காலத்தில் தமிழ்த் தேசியம் தொடர்ந்தும் சிதைந்து கொண்டு தான் சென்றிருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியலுக்கு வெளியிலிருந்தவர்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட தமிழ்த் தரப்பால், அரசின் ஆதரவாளர்களென்றும் தமிழ்த் தேசிய விரோதிகளென்றும் வர்ணிக்கப்படுபவர்கள், தேர்தல்களில் வெற்றி பெறுகின்றனர். தமிழ்த் தேசியத்தின் பெயரால் அவ்வாறானவர்களை மக்கள் மத்தியிலிருந்துஅகற்ற முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் நோக்கினால், இந்துத்துவ சார்பு நிலையால் தமிழ்த் தேரியம் சிதைந்து விடுமென்று வாதிடுவதானது மிகவும் பலவீனமான வாதமாகவே இருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியல் மதச்சார்பற்றதென்று வாதிடுவதில் உண்மையிருந்தாலும் கூட அதனை ஒரு பலமான வாதமாக முன் வைப்பதற்கான நியாயங்கள் தமிழர் பக்கத்தி லில்லை.

இந்துத்துவ சார்புநிலையை கைக்கொள்வதால், தமிழர்களுக்கு என்ன கிடைக்குமென்று கேள்வியெழுப்ப முடியுமென்றால், மதச்சார் பற்ற தேசியத்தால், தமிழர்களுக்கு எதைப் பெற்றுக் கொடுக்க முடிந்ததென்னும் கேள்விக்கு பதில் என்ன? ஒன்றுமில்லை என்பது தானே. இவ்வாறு, இந்துத்துவ சார்பு நிலையை நியாயப்படுத்துபவர்கள் கேட்கின்றனர். இந்த வாதத்தை கேள்விக்குள்ளாக்கக்கூடிய நிலையில், ஏனையவர் கள் இல்லை.

ஏனெனில், விடுதலைப்புலிகள் இல்லாத கடந்த 13 வருடங்களில் தமிழ் மக்களுக்கு சரியான பாதையை எவராலும் காண்பிக்க முடியவில்லை. இந்த வழிமுறை மட்டுமே சரியானதென்று கூறக்கூடிய எந்தவொரு கட்சியும் மக்கள் மத்தியில் எழுச்சியடையவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்கு சரியானதென்று கருதும் ஒன்றைகைக் கொள்ள முற்படுகின்றனர். தாங்கள் நம்பும் ஒன்றை பரிசோதித்து பார்க்க முற்படுகின்றனர். இந்த இடத்தில் தான் இந்துத்துவ சார்புநிலையென்பதும் ஒரு வழிமுறையாக நோக்கப்படுகின்றது.

இதற்கு என்ன காரணம்? விடுதலைப் புலிகளின் தோல்வி, தமிழ்த் தேசிய அரசியல் மீது சில கேள்விகளை முன் வைத்தது. பலருக்கும் பலவாறான கேள்விகளிருந்தாலும் கூட, அனைத்து வகையான கேள்விகளும் விடுதலைப்புலிகளின் தோல்வியிலேயே தரித்து நின்றது. ஏன் இவ்வாறானதொரு தோல்வியேற்பட்டது? மூன்று தசாப்தகாலமாக நிலை பெற்றிருந்த ஒரு இயக்கமானது, எவ்வாறு மூன்றே வருடங்களில் அழிக்கப்பட்டது? ஏன் இதனை தடுத்து நிறுத்த முடியவில்லை?

அருகில் தமிழ்நாட்டில் இத்தனை கோடி தமிழ் மக்கள், மேற்குலக நாடுகளில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழ் மக்கள், இத்தனையிருந்தும் முள்ளிவாய்க்கால் அழிவை தடுத்து நிறுத்த முடியவில்லையே! ஏன்?

இந்தக் கேள்விகள் அனைத்திற்குமான பதிலாக இருந்தது, விடுதலைப் புலிகளுக்கு தற்பாதுகாப்பு நிலை ஆதரவு வழங்குவதற்கு ஒரு நாடு இருந்திருக்கவில்லை. அப்படியொரு நாடு இருந்திருக்குமென்றால், அது இந்தியாவால் மட்டுமே முடிந்திருக்கும். விடுதலைப்புலிகளின் சில வரலாற்றுத் தவறுகளால், புலிகள் இந்தியாவின் ஆதரவை முற்றிலுமாக இழந்து போயினர். இந்தியாவின் தவிர்க்க முடியாத இடம் தொடர்பான பார்வையில், பலரும் உடன் பட்டனர்.

பிராந்திய அரசியல் பின்புலத்தில் இந்தியாவின்றி, ஈழத்தமிழர் வாழ்வில் அணுவும் அசையாதென்னும் பார்வையை எவராலும் நிராகரிக்க முடியாமல் இருந்தது. விரும்பினாலும் விரும்பா விட்டாலும் கூட, பிராந்திய அரசியல் யதார்த்தத்தை நம்மால் நிராகரிக்க முடியாதென்னும் பார்வையில் அனைவருமே உடன்பட்டனர்.

இந்த இடத்தில் எழுந்த அடுத்த கேள்வி, இந்தியாவின் இடம் தவிர்க்க முடியாததென்றால், எவ்வாறு இந்தியாவுடனான உறவை பலப்படுத்துவது? இதற்கான பாரம்பரிய பதில், தமிழ்நாட்டு ஆதரவு சக்திகளுடன் இணைந்து பணியாற்றுவதன் ஊடாக, புதுடில்லியை தமிழர்களுக்கு சாதகமாக திருப்புவது. ஆனால் இந்த அணுகுமுறையால் தமிழர்கள் எதையும் அடைய முடியவில்லை. முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து மக்களை பாதுகாக்க தமிழ்நாட்டால் எதனையும் செய்ய முடியவில்லையே? பின்னர் எதற்காக தோல்வியடைந்த வழிமுறையை தொடர்ந்தும் கைக்கொள்ள வேண்டும்? இவ்வாறான கேள்விகளுக்கான பதிலாக முன்வைக்கப்பட்டது தான், (9ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச நாணய நிதியத்தின் தென்னிலங்கைக்கான கடன் உதவியும் புலம்பெயர் தமிழரின் அரசியலும்

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்க முன் வந்துள்ளதுடன் கடன் பெறும் தகுதியை இலங்கை பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. நீண்டகால இழுபறிக்குப் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பு அதிக நம்பிக்கையை தந்துள்ளதாகவும் இலங்கை வங்குரோத்து நாடல்ல எனவும் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



ஆனாலும் ஆளும் – எதிர்க் கட்சிகளுக்கிடையே சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொடர்பில் அதிக கேள்விகளும் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிபந்தனைகளை வெளியிடுமாறு எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் கோரியுள்ளது. எல்லையில்லாத நிபந்தனைக்கு அரசாங்கம் உடன்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. கடன் வழங்குவதற்கான ஒப்புதலை நாணய நிதியம் அறிவித்ததும் தென்னிலங்கையில் ஆளும் தரப்பு மகிழ்ச்சியடைந்துள்ளதுடன், அதனைக் கொண்டாடியது.

ஆனால் தென்னிலங்கையில் பொருளாதார நெருக்கடி தோன்றிய போது தமிழர் பிரச்சினை சார்ந்து எழுந்த கேள்விகள் அனைத்தும் மௌனமாகி விட்டதையும் புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகளது நிலைப்பாட்டையும் தேடுவதாக இக்கட்டுரை அமையவுள்ளது. முதலில் ஐ.எம்.எப். பணிப்பாளரது அறிவிப்பினை நோக்குவது பொருத்தமானதாக அமையும். இலங்கை எதிர்கொள்ளும் பெரும் பொருளாதார மந்த நிலையிலிருந்து மீள்வதற்கு வலுவான சீர்திருத்தங்கள் அவசியம் என நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீலா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கும் போது, ஊழலுக்கு எதிரான சட்டங்கள் மறுசீரமைப்பது உட்பட ஊழலை எதிர் கொள்ளும் முயற்சிகள் தொடர வேண்டும். வரி நிர்வாகம், பொது நிதி, செலவு மேலாண்மை மற்றும் எரிசக்தி விலை நிர்ணயம் போன்றவற்றுக்கான நிதி நிறுவன சீர்திருத்தங்கள் அவசியம் என்றார். நாணய நிதியத்தின் செயற்பாட்டை வரவேற்றுள்ள அமெரிக்கா, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதையில் ஒரு முக்கிய படி எனவும் சீர்திருத்தங்கள் தொடர்வதுடன் வேலைத் திட்டங்கள் பொருளாதாரப் பாதையை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜீலி சங் தெரிவித்துள்ளார். மேலும் அவரது தெரிவிப்பு அனைவரும் பயன் பெறும் வகையில் சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மைக்கு தீர்வு காணும் கட்டமைப்பு, நீடித்த சீர் திருத்தங்கள் முக்கியமானவை என்று குறிப்பிட்டிருந்தார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய வெளிப்பாடுகள் சுட்டிக் காட்டப்படவில்லை. புலம் பெயர்ந்த தமிழரின் முதலீடுகளை ஈர்ப்பதற்காக பல செய்திகளை ஜனாதிபதியும் சர்வதேச சக்திகளும் உரையாடி வந்தனர். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதும் இனப்பிரச்சினைக்கு சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு முன்வைக்கப் போவதாக ஜனாதிபதி உரையாற்றியிருந்தார். பேச்சுவார்த்தைக்கான திகதிகள் முன் வைக்கப் பட்டதுடன், ஒரு சில சந்திப்புகளை மேற் கொண்டதுடன் தீர்வை சுதந்திர தினத்தன்று அறிவிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதற்கான உரையாடல்களும் எண்ணங்களும் பரவலாக பேசப்பட்டு வந்தன. அதற்கான எந்த முகாந்திரமும் அன்றி தேர்தலும் கடன் பெறுவதற்கான நடவடிக்கைகளும் அதனைக் கொண்டாடும் மனோ நிலையும் மட்டுமே தென்னிலங்கையில் காணப்படுகிறது.

தென்னிலங்கை அரசியல் தலைமைகள் எப்போதும் தந்திரோபாயமாக நகர்வதாக இப்பகுதி பல தடவை சுட்டியுள்ளது. தமிழ்த்தரப்பு தனது எல்லைக்குள் இருந்து கொண்டு தீர்வை சாத்தியப்படுத்துவதாகக் கருதுவதும் புலம்பெயர்ந்த அமைப்புகள் எல்லையை மீறி உரையாடல்களை மேற் கொள்வதும் இன்றைய நிலைக்கு அடிப்படையாகும். அதனை சற்று விரிவாக நோக்குவது அரியமானது.

ஒன்று, புலம்பெயர்ந்த அமைப்புகளே சர்வதேச அரசியலைப் பற்றிய கரிசனையுடன் செயல்படுபவை. அவை பல உரையாடல்களை பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது நிகழ்த்தியவை. நாணய நிதியத்துடனும் உலக வல்லரசுகளுடனும் அதிக உரையாடல்களை மேற்கொள்ளும் திறனுடன் மட்டுமன்றி அவ்வகை முயற்சிகளை மேற்கொள்வதாக நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தன.

இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் உரையாடுவதாகவும் நாணய நிதியத்தின் உதவி இலங்கைக்கு கிடைக்க வேண்டுமாயின் இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனவும் நிபந்தனை முன்வைத்ததாகவும் உரையாடப்பட்டது. அதன் வாயிலாக முதலீடுகளை புலம் பெயர்ந்த தளத்திலிருந்து கொண்டு வர முடியுமெனவும் அத்தகைய உரையாடலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கான முயற்சிகள் ஒரு பக்கம் நிகழ்ந்து கொண்டிருக்க, மறுபக்கத்தில் அவற்றைக் குழப்பும் நகர்வுகளும் நடை பெற்றுக் கொண்டிருந்தன. புலம்பெயர்ந்த தளத்தில் நிலவிய முரண்பாடுகளும் பகைமையும் தனிப்பட்ட நலன்களும் அத்தகைய உரையாடலுக்குட்பட்ட அனைத்தையும் தோற்கடித்தன. அது மட்டுமன்றி சர்வதேச அரசியலையோ சர்வதேச அரசியலுக்கான நிறுவனங்களையோ புலம்பெயர் அமைப்புகள் கட்டுப்படுத்தும் திறனோ அல்லது செல்வாக்குச் செலுத்தும் வல்லமையோ கொண்டிருக்காத தன்மையும் தோல்விக்குப் பின்னாலுள்ள வலுவான காரணமாகும்.

கடந்த காலங்களில் எவ்வாறு கோஷங்களால் தமிழர் அரசியல் கட்டமைக்கப்பட்டதோ அதேபோன்ற கோஷங்களால் புலம்பெயர்ந்த தமிழர் அரசியலும் அமைந்துள்ளது. இவை எதனையும் மாற்றாது சர்வதேச நிறுவனங்களையோ நாடுகளையோ வல்லரசுகளையோ கட்டுப்படுத்தவோ செல்வாக்குச் செலுத்தவோ முடியாது. தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஆளும் கட்சியினரையும் ஈழத் தமிழர் விவகாரத்தில் ஈடுபடுத்துகின்றனவே அன்றி வலுவான ஒரு சக்தியின் செயல்பாடாக புலம் பெயர்ந்த தமிழர் அரசியலால் உருவாக்க முடியவில்லை.

ஈழத்தமிழரது நூற்றாண்டு தோல்விக்கான நிலை சர்வதேச அரசியலாலேயே ஏற்பட்டதென்ற புரிதல் தமிழர் அரசியலில் முழுமையாக உருவாகவில்லை. இது புலத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்த அரசியலிலும் ஏற்படவில்லை. புலம்பெயர்ந்த சூழலில் இருந்து கொண்டு புலத்தை கட்டமைக்க முயல்கிறார்களே அன்றி சர்வதேச அரசியலை கட்டுப்படுத்தும் உத்திகளை கட்டமைக்க தயாரில்லாத நிலையே தொங்கிறது. இரண்டு, தென்னிலங்கை அரசியலுடன் ஒத்துழைக்கும் புலம் பெயர்ந்த சக்திகளது செல்வாக்கு வளர்ந்ததுடன் அரசின் வேண்டுதலுக்கு கட்டுப்பட்டு இலங்கைத் தீவில் முதலீடுகளை மேற் கொள்ள சில தனிநபர்களும் நிறுவனங்களும் முன் வந்துள்ளன. அவை அனைத்துமே வர்த்தக நோக்கத்துடன் செயல் பட்டனவே அன்றி எந்த ஒரு சிறிய அளவிலும் தமிழ்த் தேசிய அரசியல் இருப்பு பற்றிய பிரக்ஞையுடன் செயல்படுபவர்களாகத் தெரியவில்லை.

வடக்கு, கிழக்கிலும் தென்னிலங்கையின் சில பகுதிகளிலும் அத்தகைய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது இலங்கைத்தீவின் பொருளாதார மீட்சிக்கு உதவுகின்றமை ஒரு பக்கம் அமைய மறு பக்கத்தில் ஈழத்தமிழர் அரசியலையும் அதன் இருப்பையும் நிபந்தனையின்றி நிராகரிக்கின்றதாகவே தெரிகிறது. இவை ஒவ்வொன்றும் தென்னிலங்கையின் ஆக்கிரமிப்பு அரசியலை ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாது அதற்கான முகாந்திரத்தையே காணாமல் செய்துள்ளது.

மூன்று, தென்னிலங்கை அரசியல் மீதான குற்றச் சாட்டுகள் புலத்திலுள்ள அரசியல் சக்திகளால் எவ்வாறு முன் வைக்கப்படுகின்றதோ அவ்வாறே புலம் பெயர் அமைப்புகளாலும் மேற்கொள்ளப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் புலத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புகளுக்கும் தொழில் சங்கங்களுக்கும் புலம்பெயர்ந்த அமைப்புகளே ஆலோசனை வழங்குபவையாகவும் நிதியுதவி செய்பவையாகவும் காணப்படுகின்றன. இதனால் எந்த மாற்றத்தையும் அடைய முடியாத நிலை இரு தரப்புக்கும் ஏற்பட்டுள்ளதுடன், மாற்றத்தைப் பற்றிய எந்த உந்துதலும் இல்லாத மனோநிலையே வளர்ந்துள்ளது. தற்போதும் பழைய கோட்பாடுகளுக்குள்ளும் கோஷங்களுக்குள்ளும் தமிழர் அரசியலை கட்டிப் பராமரிப்பதில் கவனம் கொள்கின்றன. மாறாக புதிய உலகம் பற்றிய கரிசனையையோ உலக ஒழுங்கில் ஏற்பட்டு வரும் மாற்றத்தையோ கவனத்தில் கொள்ளத் தவறுகின்றன.

புலமும் புலம்பெயர் தமிழ் சக்திகளும் எதிரிகளை உருவாக்குவதில் கவனம் கொண்டுள்ளனர். நாடுகளையும் அதன் அரசியலையும் நிராகரிக்கும் தமிழர் தரப்பு அனைத்திலும் தூய்மைவாதம் பேச முனைகிறது. ஆனால் அத்தகைய தூய்மைக்குள் அத்தரப்புகளது அரசியல் இல்லை என்பதை விட அதனால் இனத்திற்கு எந்த விளைவும் ஏற்படப் போவதில்லை என்பதை உணரவும் தவறுகின்றன.

புலத்தில் தமிழ்த் தேசியம் பேசப்படுவது போலவே புலம் பெயர்ந்த தளத்திலும் உரையாடப்படுவதாகவே தெரிகிறது. தேசியம் அக முரண்பாடுகளால் கட்டியெழுப்பப்பட முடியாது. அக முரண்பாடுகளைத் தோற்கடிப்பதே தேசியம் என்ற மந்திரத்தாலே, அது தமிழர் அரசியலில் அகத்திலும் இல்லை, புலம்பெயர்ந்த தளத்திலும் இல்லை என்பது துயரமான அரசியலாகவே உள்ளது.

நான்கு, தென்னிலங்கை அரசியலால் ஈழத்தமிழரது அரசியல் இருப்பு தோற்கடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியிருந்த புலம் பெயர்ந்த தரப்பும் மீளமுடியாத நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ளதாகவே தெரிகிறது.

தென்னிலங்கை அரசியலுக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை ஈழத்தமிழருக்கான அரசியலுக்கான வாய்ப்பாக கையாள முடியாத நிலை புலம்பெயர் அரசியலின் தோல்வியாகவே கொள்ளத் தோன்றுகிறது. ஏற்கனவே புலத்திலுள்ள அரசியல் சக்திகளால் முடியாது என்று கருதிய நிலை தற்போது புலம் பெயர்ந்த தளத்திலும் ஏற்பட்டுள்ளது.

எனவே பேச்சுவார்த்தைக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் உரையாடல்கள் முடிவுக்கு வந்துள்ளது. இது இலங்கைத்தீவின் அரசியலை இந்தோ-பசுபிக் உபாயம் எதிர் பட்டி மற்றும் பாதை முன் முயற்சிக்குள்ளால் நகர்கிறது என்பதை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது.

நாணய நிதியத்தின் கடன் உதவியானது, சீனாவின் கடன் பொறியை விட அபாயமானதாகவே எதிர்க்கட்சிகளால் மட்டுமல்ல அனேக தரப்புகளால் பார்க்கப்படுகிறது.

ஆனால் இரண்டுமே ஒரே வகையான விளைவையே இலங்கை அரசியலில் ஏற்படுத்தப் போகிறது. அது மட்டுமன்றி இரு அணிகளது கடன் பொறிக்குள்ளால் ஈழத் தமிழரது அரசியல் காணாமல் போகிறது என்ற செய்தியே எஞ்சியுள்ளது. புலம் மட்டுமல்ல புலம் பெயர் அமைப்புகளும் கவனம் கொள்ளத் தவறும் அரசியலை புரிந்து கொள்வது அவசியமானது.

# பொறுப்புக் கூறலை உதாசீனப்படுத்துகிறதா ஐ.நா?

ஐ.நா. அமைதிப்படையில் இலங்கை இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து ஆராய்வதற்காக ஐ.நா.வின் உயர்மட்டக் குழுவொன்று கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்தது. ஜேம்ஸ் விக்டர் டி ஆர்கோல், கேணல் லோரன்ஸ் கபினா, லெப் கேணல் ரஜீவ், மார்க் பிளட், சத்விந்தர் சிங் போல், ஆகிய ஐந்து பேர் கொண்ட ஐ.நா.வின் மதிப்பீட்டு மற்றும் ஆலோசனைக் குழு கடந்த 21ஆம் திகதி இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் விக்கும் லியனகேயை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தது. அத்துடன், ஐ.நா. அமைதிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் இலங்கைப் படையினர் மற்றும் போர்த் தளபாடங்கள், கருவிகள், வாகனங்கள் உள்ளிட்டவற்றை தயார்படுத்தும் தாய்ப் படைப்பிரிவுகளுக்கும் அந்தக் குழு சென்றிருந்தது.

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளுக்கு படையினரைப் பயிற்றுவிக்கும் இடங்களையும் அது பார்வையிட்டிருந்தது. ஆபிரிக்க நாடான மாலியில், இஸ்லாமிய தீவிரவாத அச்சுறுத்தல்கள் அதிகம். அங்கு ஏற்கனவே, இலங்கை இராணுவத்தின், 20 அதிகாரிகள் மற்றும் 223 படையினர், ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுகின்றனர். இவர்கள் ஐ.நா.வின் வாகனத் தொடரணிகளுக்குப் பாதுகாப்பு வழங்கும் பிரிவில் உள்ளனர்.

ஐ.நா. வாகனத் தொடரணிகள் செல்லும் பாதைகளை துப்புரவு செய்வது, அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, வாகனத் தொடரணியை பாதுகாப்புடன் குறித்த இடத்துக்கு கொண்டு சென்று சேர்ப்பது, அங்குள்ள 4 ஆவது CCC இராணுவ அணியின் பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக, 20 அதிகாரிகள் மற்றும் 223 படையினரைக் கொண்டதாக, CCC B1 என்ற இன்னொரு படைப்பிரிவை இலங்கையில் இருந்து மாலிக்கு அனுப்பி வைக்க ஐ.நா. விரும்புகிறது. ஐ.நா. அமைதி காக்கும் படையில் இவர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கைப் படையினரின் எண்ணிக்கை இரண்டு மடங்காகும். புதிய அணியை அங்கு அனுப்புவதன் மூலம், இலங்கைக்கு மேலதிகமாக 9 மில்லியன் டொலர்கள் அந்நியச் செலாவணி வருமானமும் கிடைக்கும். ஐ.நா. அதிகாரிகளைச் சந்தித்த இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே, ஐ.நா. வின் அனுமதி கிடைத்தவுடன் மிக விரைவாக தமது படையினரை அங்கு அனுப்பி வைக்கத் தயார் நிலையில் இருப்பதாக கூறியிருக்கிறார்.

கொழும்பு வந்த ஐ.நா. உயர்மட்டக் குழுவினர், சாதகமான அறிக்கையை சமர்ப்பித்தால் மாலிக்கு இன்னொரு இலங்கை இராணுவ அணி விரைவாக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிகிறது. ஐ.நா. அமைதிப்படையில் இருந்து இலங்கைப் படையினர் வெளியேற்றப்படுவார்கள் என்று, ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக், கடந்த 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அறிவித்திருந்தார். அதற்கு மாறாக, இப்போது ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஐ.நா. கவனம் செலுத்த தொடங்கியிருக்கிறது.

ஐ.நா. அமைதிக்காக்கும் நடவடிக்கை பணியகத்தின், இந்த செயற்பாடு, மனித உரிமை அமைப்புகளுக்கு மாத்திரமன்றி, ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பணியகத்துக்கும் கூட அதிர்ச்சியைக் கொடுக்க கூடியது. ஏனென்றால், இலங்கை இராணுவம் தன் மீதான குற்றச்சாட்டுகளை இன்னமும், பொய் என்று நிரூபிக்கவில்லை. உரிய விசாரணைகளை முன்னெடுத்து, குற்றவாளிகளைத் தண்டிக்கவோ, அல்லது அவர்கள் குற்றமிழைக்கவில்லை என்று உறுதிப்படுத்தவோ இல்லை. 2019ஆம் ஆண்டு



இலங்கை இராணுவத் தளபதியாக ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை குறித்து கவலை வெளியிட்டு கருத்து வெளியிட்ட போது தான், ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக், இது, எதிர்காலத்தில் இலங்கை இராணுவம் ஐ.நா அமைதிப் படைப் பிரிவில் நிலை நிறுத்துவதை டைநிறுத்தும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அதற்குப் பின்னர், ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைப் படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டபோதும் மாலியிலிருந்து அவர்கள் முற்றாக விலக்கப்படவில்லை.

அதற்கு முக்கியமான காரணம், ஐ.நா. அமைதிப்படை ஆபத்தை அதிகம் எதிர் கொள்ளுகின்ற நாடுகளில் மாலி மிக முக்கியமானது. அங்கு இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் தாக்குதல் அச்சுறுத்தல்கள் அதிகம். அவ்வாறான இடங்களில் பணியாற்றுவதற்கு தங்களின் படையினரை அனுப்புவதற்கு எல்லா நாடுகளும் விரும்புவதில்லை. பதுக்கித் தாக்குதலை எதிர் கொள்ளும் அபாயங்களும் அதிகம். இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது, கண்ணிவெடிகள், கிளைமோர்களில் இருந்து வாகனத் தொடரணிகளை பாதுகாக்கும் பல்வேறு புதிய உத்திகளை கண்டறிந்தது.

அத்துடன் தொடரணிகளின் பாதுகாப்பு விடயத்திலும் அது சிறப்புத் தேர்ச்சியைக் கொண்டிருக்கிறது. இவ்வாறான நிலையில் இலங்கை இராணுவம் இந்தப் பணிக்குப் பொருத்தமானது என ஐ.நா. அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டுள்ளது. தொழில் தேர்ச்சி காரணமாக இந்த வாய்ப்பு இலங்கை இராணுவத்துக்கு கிடைக்கின்ற

அதேவேளை மனித உரிமை கரிசனைகள் மற்றும் பொறுப்புக்கூறல் கடப்பாடு கேள்விக்குள்ளாகியிருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு அறிக்கையிலும், போர்க் காலத்தில் இடம் பெற்ற மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவில்லை என்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. அண்மையில் உலக நாடுகளின் மனித உரிமைகள் நிலை குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் கூட, பொறுப்புக்கூறலை முன்னெடுக்க இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறது.

தண்டனை விலக்கு நிலை நீடிப்பது குறித்தும், அந்த அறிக்கையில் விசனம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானி கராக மிசேல் பச்லெட் அம்மையார் பணியாற்றிய போது, இலங்கைப் படையினர், போர்க் குற்றங்களில் தொடர்புபட்டவர்கள் என்பதால் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்ற அனுமதிக்கும் போது, விரிவான ஆய்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அதாவது ஒவ்வொரு படையினரதும் தனிப்பட்ட மனித உரிமை பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டு, அவர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என்று உறு திப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறியிருந்தார். ஆனால் இலங்கை அரசாங்கமோ, ஐ.நா. வோ அதனை முழுமையாக கடைப்பிடிக்கவில்லை. ஐ.நா.வை ஏமாற்றி போர்க் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய சில அதிகாரிகள், ஐ.நா. அமைதிப் பணிக்கு அனுப்பப்பட்டனர். பின்னர் அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு திருப்பி அழைக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

அதேவேளை, போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஜெனரல் சவேந்திர சில்வா இன்னமும், பாதுகாப்பு அதி காரிகளின் பிரதானியாக இருக்கிறார். ஜெனரல் கமல் குணரத்ன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கிறார். அது போன்று குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய பல படை அதிகாரிகள் இன்னமும் முக்கிய பதவி நிலைகளில் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில், குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தலைமைப் பதவிகளில் இருக்கின்ற நிலையிலும், குற்றச்சாட்டுகளை விசாரிக்கவோ, அவற்றுக்குப் பொறுப்புக்கூறவோ நடவடிக்கை எடுக்கப்படாத நிலையிலும்,

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஐ.நா. அமைதிப்படையில் இலங்கைப் படை யினரை அதிகளவில் சேர்த்துக் கொள்ள எடுக்கப்படும் முயற்சிகள் நிச்சயமாக, பாதிக்கப்பட்ட தரப்பினரையும், மனித உரிமை அமைப்புகள், ஆர்வலர்களையும், கவலைக்குள்ளாக்க கூடிய ஒன்று தான்.


மாலியில் பணி யாற்றுவதற்கு ஏனைய நாட்டுப் படை யினர் முன்வரவில்லை என்பதற்காக, இலங்கைப் படையினரை அதிகளவில் உள்ளீர்க்க முனைவது, பொறுப்புக் கூறல் கடப்பாட்டை ஐ.நா. வும் உதாசீனம் செய்கிறதா என்ற கேள்வியையே எழுப்ப வைக்கிறது



சிவமயம்
ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தேசமாக திரள வைப்பது ஐக்கிய முன்னணியே!

கட்டுரையாளர் இலங்கையில் இருந்து
– சி.யோதிலிங்கம் –



பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் கட்சிகள் ஒருமித்து செயற்படும் வகையில் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கான முயற்சி சென்ற இரு வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்றது. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் இது விடயத்தில் முன்னிலையில் நின்று செயற்பட்டிருக்கிறார். தமிழரசுக்கட்சி, புளொட் ரெலோ, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கிடையே இது விடயத்தில் கொள்கை ரீதியான இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை. எனினும் தொடர்ந்தும் உரையாடுவதற்கு தீர்மானிக்கப் பட்டது. ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடனும் விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியுடனும் எதிர்காலத்தில் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்று விவகாரங்களை உடனடியாக முன் னெடுப்பது என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதில் முதலாவது தமிழ்பேசும் மக்களின் உரிமைகள் தொடர்பாக தென்னிலங்கை மக்களுடன் நேரடியாக உரையாடுவதாகும். தென்னிலங்கை அரசியல் சக்திகள் தவறான கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்புகின்றார்கள் என்பதற்காகவே நேரடியாக உரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவது அனைத்து தேர்தல்களிலும் விட்டுக் கொடுப்புடன் செயற்படுதலாகும். மூன்றாவது தமிழ்பேசும் மக்களுக்கு பொருத்தமான அரசியல் தீர்வினை இலங்கை என்ற அதிகாரக் கட்டமைப்புக்குள் பெற்றுக் கொடுப்பதாகும். அதுவரை இலங்கை — இந்திய ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்தும்படி அழுத்தங்களைக் கொடுப்பது என்றும் அதேவேளை மாகாண சபை முறையை தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்வதில்லை என்றும் இணக்கம் காணப் பட்டுள்ளது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுதல் என்று வரும் போது வடக்கு — கிழக்கு இணைப்புக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை கூட்டிருப்பு, கூட்டுரிமை, கூட்டடையாளம் என்பதை பேணுவதற்கு இணைப்பு மிக மிக அவசியம். ஆனால் முஸ்லிம் தரப்புக்கள் இதற்கு இணங்கும் என்று கூற முடியாது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை ஆனால் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான கோரிக்கைக்கு அது ஒரு போதும் இணங்காது. முன்னணியை விடுத்து ஐக்கிய முன்னணியை உருவாக்குவதிலும் பயன்கள் பெரிதளவிற்கு கிடையாது.

### பிரக்ஞைபூர்வ தமிழ்த்தேசிய சக்திகள்

முன்னணியின் ஏனையவர்கள் அதிகளவில் ஒன்றித்துள்ளனர். பெரும்பாலான புலம்பெயர் தரப்புக்களும் முன்னணியின் கருத்துக்களுடனேயே நிற்கின்றன. எனவே 13ஆவது திருத்தத்தை தவிர்த்து ஏனைய பொது விடயங்களை நிலைப்பாட்டுடனேயே அடையாளம் கண்டு முன்னேற முயல்வதே ஆரோக்கியமாக இருக்கும். தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசனுடன் ஒரு சந்திப்பை இக் கட்டுரையாளர் கடந்த 12ஆம் திகதி மேற் கொண்டார். மனோகணேசனின் கொழும்பு இல்லத்தில் சுமார் இரண்டரை மணி நேரம் வரை இச்சந்திப்பு இடம்பெற்றது. அப்போது அவர் கூறிய இன்னொரு கருத்தும் மிகவும் முக்கியமானது. 'போர்க் குற்ற விவகாரத்தை முன்னெடுப்பது ஒரு புறமிருக்க சர்வதேச அரங்கில் இலங்கை அரசை அரசியல் குற்றவாளியாக்க சகல முயற்சிகளையும் செய்ய வேண்டும்' என்பதே அக்கருத்தாகும். தமிழ்த் தரப்பு இக்கருத்தையும் கவனத்தில் கொள்வது நல்லது.



தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு எதிரான அருவருக்கத்தக்க நிலப் பறிப்பு, மொழியழிப்பு, பொருளாதார சிதைப்பு, கலாசாரச் சிதைப்பு உட்பட மேற் கொள்ளப்படும் ஒடுக்குமுறைகள், அரசியல் யாப்பு உட்பட பாராளுமன்ற, வழக்காற்று சட்டங்களை நடைமுறைப்படுத்தாமை, அரச இயந்திரத்தை பேரின மயமாக்கல் என்பவற்றை பிரதான அரசியல் குற்றங்களாக சுமத்தி குற்றவாளியாக்கலாம்.

இதனூடாக குறைந்த பட்சம் தொடர்ச்சியாக இடம் பெறுகின்ற ஆக்கிரமிப்புக்களை யாவது தடுப்பதற்கு முயற்சிக்கலாம். இந்தக் குற்றச்சாட்டுக்களை தமிழ் மக்கள் தனித்து முன்வைப்பின் அது வலிமையான அழுத்தங்களை தராது. ஒடுக்கப்படும் தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் இணைந்து முன்னெடுக்கும் போதே அழுத்தம் வலிமையாக இருக்கும். சிங்கள இனம் தவிர்ந்த ஏனைய இனங்களுக்கு இலங்கைத் தீவில் இருப்பு இல்லை என்ற உண்மையும் வெளிப்படுத்தப்படும்.

இவை ஒரு புறமிருக்க தமிழ் மக்களைப் பொறுத்தவரை பல ஐக்கிய முன்னணிகள் தற்போதைய சூழலில் அவசியமாக உள்ளன. தமிழ் அரசியலில் அடிப்படை சக்திகளாக இருப்பவர்கள் தாயகத்தில் வாழ்கின்ற மக்களும் அதன் நீட்சியாக புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற மக்களுமாவர். சேமிப்பு சக்திகளாக இருப்பவர்கள் மலையகத் தமிழர்கள், தமிழகத் தமிழர்கள் உட்பட உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவளித் தமிழர்களாவர். நட்பு சக்திகளாக இருப்பவர்கள் சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகளாவர்.

எனவே தமிழ் மக்களைப் பொறுத்தவரை முதலாவதும் முதன்மையானதுமான ஐக்கிய முன்னணி அடிப்படை சக்திகளுக்கிடையேயான ஐக்கிய முன்னணியாகும். தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படை வலிமையே இந்த ஐக்கிய முன்னணியில் தான் தங்கியிருக்கின்றது.

தேசிய இன ஒடுக்குமுறை என்பது அத் தேசிய இனத்திற்குப் புறத்தேயிருந்து வரும் ஒடுக்குமுறையாகும். தேசிய இனத்தின் அனைத்துப் பிரிவுகளும் ஒன்று திரண்டு இதற்கு முகம் கொடுக்க வேண்டும். தேசிய இனத்தில் பல்வேறு பிரிவுகள் கொள்கை நிலைப் பாடுகள் இருப்பதால் பல அமைப்புகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். இவை அனைத்தையும் ஒரு இலக்கை நோக்கி ஒன்று திரட்ட வேண்டும். ஐக்கிய முன்னணி இல்லாமல் இதனை சாத்தியமாக்க முடியாது. எனவே அடிப்படை சக்திகளுக்கிடையிலான ஐக்கிய முன்னணி மிகமிக அவசியமாகும்.

இரண்டாவதாக, அடிப்படை சக்திகளான தாயகத் தமிழர்களுக்கும், உலகத் தமிழர்களுக்கும் இடையிலான ஐக்கிய முன்னணியாகும். இதற்காக 'உலகத் தமிழ்த்தேசிய வாதம்' என்கின்ற ஒரு தேசியவாதத்தை கட்டியெழுப்பலாமா? என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். ஏற்கனவே தமிழ் நாட்டில் இதற்கான முயற்சிகள் இடம் பெறத் தொடங்கியுள்ளன. ஆயுதப்போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து 'தமிழவன்' போன்ற தமிழ்ப் புலமையாளர்கள் இதற்கான கருத்துத் தளத்தை உருவாக்குவதில் முன்னின்றனர். ஆயுதப் போராட்டம் பின்னடைவுக்குச் சென்றமை தமிழகப் புலமையாளர்களை கடுமையாகவே பாதித்திருந்தது. தமிழவன் '21ஆம் நூற்றாண்டு என்பதே தமிழர்களுக்கு எதிரான நூற்றாண்டா?' என்று ஒரு தடவை கேள்வியெழுப்பியிருந்தார்.

தவிர தமிழவன் இன்னோர் கருத்தையும் கூறியிருந்தார். தமிழர்களின் ஈனநிலை பற்றி சிந்தித்தவர்களில் இருவர் முக்கியமானவர்கள். அவர்களில் ஒருவர் ஈ.வே.ரா.பெரியார். மற்றையவர் பிரபாகரன். முதலாமவர் அடிமைக் கூட்டமாக இருக்கும் தமிழனுக்கு முதல் முதலில் சுயமரியாதை வேண்டும் அதற்காக சுயமரியாதை இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்று செயற்பட்டார்.

இரண்டாமவர் இவ்வடிமைக் கூட்டத்திற்கு ஒரு நாடு வேண்டும் என்பதற்காக தனிநாட்டு போராட்டத்தை ஆரம்பித்தார்'' என்றும் குறிப்பிட்டார்.

உலகத் தமிழர்களுக்கும் தாயகத் தமிழர்களுக்குமிடையே ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கு முன்னர் தாயகத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்குமிடையேயும், தாயகத் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் இடையேயும் ஐக்கிய முன்னணியை உருவாக்கி அதன் வளர்ச்சியில் உலகத் தமிழர்களுக்கும் தாயகத் தமிழர்களுக்கும் இடையே ஐக்கிய முன்னணியை உருவாக்குவது ஆரோக்கியமாக இருக்கும்.

மூன்றாவதாக, தாயகத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையேயான தாயக ஐக்கிய முன்னணியாகும். ஒரு தாயகத்தில் வசிக்கும் இரண்டு தேசிய இனத்தவர்கள் என்ற வகையில் இது மிகமிக அவசியமாகும் இதன் வளர்ச்சி நிலையில் இலங்கைத்தீவில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களான தாயகத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் இணைந்தவொரு ஐக்கிய முன்னணியை உருவாக்கலாம். மனோகணேசனின் முயற்சி இத்தகைய ஐக்கிய முன்னணியை உருவாக்குவதே!.

நான்காவதாக, தாயகத் தமிழர்களுக்கும் உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்குமிடையேயான ஐக்கிய முன்னணியாகும். சர்வதேச அரசியலை தமிழ் மக்களுக்கு சார்பாக வென்றெடுக்க இவ் ஐக்கிய முன்னணி மிக மிக அவசியம். இது விடயத்தில் 'சர்வதேச அரசியலே ஒரு தேசியப் போராட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் என்ற பேராசிரியர் சிவத்தம்பியின் கூற்றை நினைவில் கொள்ள மறக்கக்கூடாது.

உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் ஐக்கிய முன்னணிக்கு முதற்படியாக சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் ஒரு ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்.

இலங்கைத்தீவு சமூகமளவில் இரண்டாகப் பிளவுபட்டிருக்கும் போது சிங்கள மக்கள் மத்தியில் முற்போக்கு ஜனநாயக சக்திகளைத் தேடுவது கடினமாகவே இருக்கும். அதற்காக முயற்சிகளை ஒருபோதும் நாம் விட்டு விடக் கூடாது. தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின்னர் சிங்கள இளம் தலைமுறையினரில் ஒரு பிரிவினர் பிரச்சினையின் வேரைத் தேடிச் செல்ல தொடங்கியுள்ளனர். அதன் போது இனப்பிரச்சினை தான் அந்த வேர் என்று அடையாளம் கண்டுள்ளனர். எனவே அத்தகைய தரப்பினருடன் கை கோர்ப்பதற்கு தமிழ்த் தரப்பு தயங்கக்கூடாது.

தமிழ் மக்கள் எண்ணிக்கையில் சிறிய தேசிய இனமாவர். இவ்வாறானதொரு இனம் தனது விடுதலைக்காக ஆற்றலில் மட்டும் தங்கியிருக்க முடியாது புற ஆற்றலையும் கட்டியெழுப்ப வேண்டும். புற ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கு தாயகத்திற்கு வெளியேயான ஐக்கிய முன்னணிகள் அதிகம் பங்களிப்பை ஆற்றக் கூடியதாக இருக்கும்.

ஆனால் துரதிஸ்டவசமாக தமிழ் அரசியல் மரபு ரீதியாகவே அடிப்படை சக்திகளிடையே கூட ஐக்கிய முன்னணியைக் கட்டுவதில் தோல்வி கண்டிருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி (1972), ஈழத் தேசிய விடுதலை முன்னணி (1985), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (2002), தமிழ் மக்கள் பேரவை (2016), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (2018) என்று அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. அடுத்தவாரம் ஐக்கிய முன்னணிக்கான நிபந்தனைகள், சவால்கள், மார்க்கங்கள் என்பவற்றைப் பார்ப்போம்.

# WORK WITH THE BEST TEAM GET YOUR HOME SOLD!

#1 HOMELIFE TEAM IN ONTARIO

SIVA & JOY

KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS

## ASSIGNMENT SALE
PINNACLE TORONTO EAST CONDOS




$589,900






- 1 Bedroom+Den
- 1 Bathroom
- 651 Sq Ft
- 1 Parking+ 1 Locker

## ASSIGNMENT SALE
THE LANDING CONDOS





**Whitby**
Victoria St W/Brock St S

- 2 Bedroom+Den
- 2 Bathroom
- 854Sq Ft
- 1 Parking+ 1 Locker


$760,000
Occupancy September 25 2023

- Exciting opportunity to live near Whitby's waterfront
- Chance to live in a beautifully scaled condominium located by the lake
- Only a 3-minute stroll to the Whitby GO Station
- Quick access to Highway 401 and 412 allowing for easy commutes


# UNION CITY in MARKHAM




## DEPOSIT STRUCTURE
$10,000 at Signing
Balance to 5% in 30 Days
5% on April 1, 2024
2.5% on October 1,2024
2.5% on April 1, 2025
5% on Occupancy



## FROM MID $400S




Minutes away from CF Markville Mall
Highway 404 just 4 minutes away
Highway 407 just 2 minutes away
Just steps away from Unionville GO Station
Close to York University Markham Campus





**SASIKUMAR SHANMUGANATHAN**
BROKER

**SIVA SHANMUGANATHAN**
BROKER

**JOY SELVANAYAGAM**
BROKER

416.709.5000

416.545.7482

www.futuregtahomes.com

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated

Bus: 905.201.9977

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! மதிப்பு அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப்படும். கிடப்பில் இருந்த கடன்கள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மனவருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது.

ரிஷபராசி அன்பர்களே! மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பண வரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்களால் நன்மை உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்.

மிதுனராசி அன்பர்களே! சுப காரிய தடைகள் அகலும். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்தியோகத்தில் சாமர்த்தியமாக செயல்பட்டு மேலகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் உண்டாகும்.

கடகராசி அன்பர்களே! தடைகளை தகர்த்தெறிந்து முன்னேற்றம் காண்பீர்கள். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் கடன் பாக்கிகள் வசூலாகும்.

சிம்மராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியா பாரத்தில் பார்ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும்.

கன்னிராசி அன்பர்களே! காரிய வெற்றி உண்டாகும். புத்தி சாதுரியத்தால் எதையும் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். செவ்வாய் சஞ்சாரத்தால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்யோகத்தில் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும்.

துலாம்ராசி அன்பர்களே! ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். மருத்துவம் சார்ந்த செலவுகள் நேரலாம். ஆயுதங்கள் கையாளும் போதும், வாகனங்களை ஓட்டும் போதும் எச்சரிக்கை அவசியம். அடுத்தவர்களுக்கு உதவ போய் வீண் பழி ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்

விருச்சிகராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.



தனுசுராசி அன்பர்களே! தடைப்பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். ராசியில் குரு இருப்பதன் மூலம் ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர்.

மகரராசி அன்பர்களே! கொடுக்கல், வாங்கலில் இருந்த பிரச்சனை தீரும்.எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து நன்மதிப்பை பெறுவார்கள்.

கும்பராசி அன்பர்களே! சுபச்செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம். கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வேலை செய்யும் இடத்தில் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது

மீனராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் மற்றும் கேது வால் பொருள்வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தைரியாதிபதி சூரியனும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். எதிர்பார்த்த லாபம் வரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## சிலை அரசியல்:- அறிவும் செயலும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) போது என்ன தோன்றுகிறது? அச்சிலைக் காகக் கட்டப்பட்ட பீடத்தோடு சேர்த்துப் பார்க்கும் போது அச்சிலை சிறுத்துப்பே பாய்த் தெரிகிறது. முத்த வெளி, டச்சுக்கோட்டை என்பவற்றின் பின்னணியில் அச்சிலையை நிற்கின்ற வள்ளுவராக வடிவமைத்து இருந்திருந்தால் ஒரு பிரமாண்டத்தை காட்டியிருக்கலாம். ஆனால் வீதிச் சுற்று வளைவில் எதைக் கட்டினாலும் அதற்குப் போக்குவரத்துத் துறைசார் வரையறைகள் உண்டு என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அதன்படி ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் எதையும் கட்ட முடியாது. ஆயின் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட வெளிக்குள் எப்படிப்பட்ட ஒரு சிலையை ஸ்தாபிப்பது என்பதில் அரசியல் மற்றும் அழகியல் தெரிவுகள் இருக்க வேண்டும். கோட்டை, முத்தவெளி என்பவற்றின் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது அச்சிலை போதாது என்ற உணர்வே எழுகிறது.

இதுதான் பிரச்சினை. இது தொடர்பில் துறைசார் நிபுணர்களின் அறிவை யாருமே பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. சிலைகளின் விடயத்தில் மட்டுமல்ல, பொது வெளிச் சிற்பங்கள், பொதுக் கட்டங்கள் போன்றவற்றில் மட்டுமல்ல, அரசியலும் உட்பட ஈழத்தமிழர்களின் பெரும்பாலான பொதுவிடயங்களில் அறிவுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லை. அறிவு தன் பாட்டில் பாடப் புத்தகங்களில் இருக்கின்றது. செயல் தன்பாட்டில் நடக்கின்றது.

அறிவுக்கும் செயலுக்கும் இடையிலான இந்த இடைவெளி அதிகமாக வெளிப்படும் இடமும் அதிக நாசத்தை விளைவித்த இடமும் எது வென்றால் தமிழ் அரசியல் தான். சிலைகள் கோணல் மாணலாக வருவதோ அல்லது பொருத்தமற்ற இடங்களில் பொருத்தமற்ற அளவுகளில் நிர்மாணிக்கப்படுவதோ அழகியற் சிதைவு மட்டுமே. பண்பாட்டுச் சிதைவு மட்டுமே. ஆனால் அரசியலில் அவ்வாறு துறைசார் நிபுணத்துவத்தை புறக்கணிப்பது அல்லது சட்டக் கண்களால் எல்லாவற்றையும் அளப்பது என்பது எத்துணை பாரதூரமானது என்பதனைக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கண்டோம். அறிவையும் செயலையும் பொருத்தமான விதங்களில் இணைக்கத் தவறிய ஒரு சமூகம் இப்பொழுது சிலைகளை வைத்து விட்டு ஆளையாள் தின்று தீர்க்கின்றதா?

## கடவுள்களைக் காப்பாற்ற...

(8ம் பக்கத் தொடர்ச்சி) சிவசேனை இருக்கின்றது ஆனால், சிவலிங்கம் பந்தாடப்படுகின்றது. வெடுக்குநாறி மலை சிவலிங்கம் சிதைக்கப்பட்டிருப்பதானது, அண்மையில் ஆனையிறவில் நடராஜர் சிலை வைக்கப்பட்டதற்கான எதிரொலியா? அவ்வாறாயின், மோடியின் இந்துத்துவா அணுகுமுறை இலங்கைத்தீவில் தோல்விடைந்து செல்கின்றதா?

இலங்கையில் இந்துத் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்திருப்பதற்கான அடையாளங்கள் தான் சிவலிங்க வழிபாட்டுத் தலங்களாகும். ஆனால் அது தொடர்ந்தும் சிதைக்கப்படுகின்றது.

இதற்கு அண்ணாமலையின் பதில் என்ன? ஒரு வகையில் அண்ணாமலை போன்றவர்கள் அண்மைக் காலமாக, வடக்கு மாகாணத்துடன் நெருங்கும் முயற்சிகளை மேற் கொண்டதற்கான எதிர் விளைவுகள் தானா இவ்வாறான செயல்பாடுகள்?

ஏனெனில் பி.ஜே.பியின் வடக்குடனான நெருக்கத்தை சிங்கள கடும்போக்குவாதிகள் எதிர்த்திருந்தனர். அவர்கள் இதனை ரசிக்கவில்லை. விமல்வீரவன்ச அண்ணாமலையின் வரவை விமர்சித்திருந்ததையும் நாம் இந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் தமிழரசு கட்சியின் தலைவர் செல்வநாயகம், தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமென றார் இப்போது அந்தக் கடவுள்களை காப்பாற்றுவதற்கு வழி தெரியாமல், தமிழர்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

இன்று 31 மார்ச் 2023 தந்தை செல்வநாயகத்தின் 125வது பிறந்த தினமாகும்.

## இலங்கை அமைச்சர்களின் தென்னாபிரிக்க விஜயம்

(3ம் பக்கத் தொடர்ச்சி) குற்றச்சாட்டுகளிற்கு உள்ளாகியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் நெருக்கமானவர்கள் என தெரிவித்துள்ள தென்னாபிரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் பாரதூரமான சர்வதேச குற்றங்கள் தொடர்பில் சமீபத்தில் சிங்கப்பூரில் சர்வதேச நியாயாதிக்கத்தின் அடிப்படையில் கோட்டாபய ராஜபக்சவிற்கு எதிராக மனுதாக்கல் செய்யப்பட்டது என்பதையும் குறிப்பிட்டுள்ளன.

2019இல் ராஜபக்சவிற்கு எதிராக வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தென்னாபிரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன. கோட்டாபய ராஜபக்ச தான் ஆட்சியில் இருந்த காலத்தில் தனது சகாக்கள் சிலரை உயர்பதவிகளில் நியமித்தார். இவர்களில் சிலருக்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்காக அமெரிக்கா கனடா போன்ற நாடுகள் தடைகளை விதித்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கோட்டாபய ராஜபக்சவின் தனிப்பட்ட சட்டத்தரணி அவருக்காக பல ஊழல் வழக்குகளில் ஆஜரானார் வெளிவிவகார அமைச்சராவதற்கு முன்னர் அவர் நீதியமைச்சராக பதவி வகித்தார் அந்த காலத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்தவர் கோட்டாபய ராஜபக்ச எனவும் தென்னாபிரிக்க மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கத்தை..

(6ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் சாதனைத் தமிழன் ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சைவமக்களின் தொன்மைகளை அழிக்கும் செயற்பாடு தொடர்கிறது. இது திட்டமிட்டு நடைபெறுகிறது. அரசாங்கம் இத்தகை செயல்களை நிறுத்த வேண்டும். தொல்லியல் திணைக்களம் ஆதிச் சைவக்கோவில்களை சைவமக்கள் பராமரிப்பதற்கு தொடர்ந்து இடையூ று செய்வதும் வேதனைக்குரியது. இலங்கையின் ஜனாதிபதி, விக்கிரகங்களை உடைத்தமை குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆலயத் திருப்பணி நடைபெறுவதற்கு இந்து கலாச்சாரத் திணைக்களம் உரிய அனுமதிகளை வழங் வேண்டும். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து சைவசமயத்துக்கு வரும் இன்னல்களை போக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE

• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242

Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!

ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
IA INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.

விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.
